SOUTHERN LANGUAGES BOOK TRUST

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது

விலை ரூ. 1-80

வீரசிம்மனின் வெற்றி யாத்திரை



வீரசிம்மனின் வெற்றி யாத்திரை

ஆசிரியர் :
கே. ஜே. ராமநாராயணன்

பாரதி பண்ணை
82, பாண்டி பஜார், சென்னை-17

Tamil

First Edition-3000 copies

December 1966

VEERASIMMANIN VETRI YATRAI

By K. J. Ramanarayanan

Price Rs. 1-80

Published under the auspices of the Southern Languages Book Trust, Madras. The Trust is helped by the Government of India, the South Indian State Governments and Universities, and Ford Foundation.

Third Programme - Tamil - Number TWENTY NINE
Rights for this edition is assigned to:
BHARATHI PANNAI, 82, Pondy Bazaar, Madras-17.
Printed at Sremati Printers, Madras-2.

அணிந்துரை

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியிடும் புதிய தொடர் நூல்களுக்கு அணிந்துரை எழுத வாய்ப்புக் கிடைத்த மைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். குறைந்த விலையில் சிறந்த புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் டிரஸ்ட் கடந்த பத்தாண்டு காலமாக தென்னக மொழிகளில் உயரிய புத்தகங்களை வெளியிட்டு பெரும் சேவை செய்து வருகின்றது. இதுகாறும் தமிழில் மட்டும் நூற்று நாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை டிரஸ்ட் வெளியிட்டுள்ளது போற்றத்தக்க முன்னேற்றமாகும்.

தனிப்பட்ட வெளியீட்டாளர்கள் யாரும், எந்நிலையிலும், சிறிதும் பாதிக்கப்படாவண்ணம் தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் வெளியீட்டு முறை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். டிரஸ்ட் வெளியீடுகளில் பெரும்பாலானவை தனிப்பட்ட வெளியீட்டகங்களின் மூலமே வெளியிடப்படுகின்றன.

பிராந்திய மொழிகளில் பல்வேறு வகையான புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் விஷயமாகும். பள்ளிகள் அல்லது கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடப் புத்தகங்கள் ஒன்றிரண்டு வெளியிட உதவி புரிந்தால் மட்டும் போதாது. மாணவர்களும், மற்றவர்களும் அறிவுத் துறையில் துரித முன்னேற்றம் காணப் பல்வேறு துறைகளைப் பற்றி எழுதப்பெற்ற நூல்கள் நிறையத் தேவை. போதிய அளவு ஆங்கில அறிவு இல்லாதவர்கள்—நம் மொழிகளிலொன்றில் போதிய பயிற்சியுடையவர்களுக்கேற்பப் பொருத்தமான நூல்களை தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. அறிவுத் துறைகளின் ஒவ்வொரு பகுதியின் அடிப்படைக் கோட்பாடுகளை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய முறையில், கல்லூரி மாணவர்கட்குப் பெரிதும் உதவும் வகையில் டிரஸ்டின் புத்தகங்கள் அமைந்துள்ளன. இந் நோக்கத்தின் அடிப்படையில் அநுபவ முதிர்ச்சி பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு புத்தகங்கள் எழுதப்படுகின்றன.

நம் நாட்டு மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதப்பட்ட நூல்களை மற்றொரு மொழியில் பெயர்த்து மக்களிடையே வழங்கும் பணியையும் டிரஸ்ட் குறிப்பிடத் தக்க அளவு செய்து வருகின்றது. கருத்துப் பரிமாற்றமே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை. பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வெளி வேற்றுமைகள் எவ்வளவோ இருந்தபோதிலும் ஒரே இந்திய கலாச்சாரமாகப் பரிணமிக்க இந்த மொழிபெயர்ப்புகள் பெருந்துணை செய்வனவாகும். குறுகிய மனப்பான்மை கொண்ட தவறான எண்ணங்களைப் பெருமளவில் போக்கவும், உலகின் மற்றப் பகுதிகளை நன்கு புரிந்து கொள்ளவும் வெளிநாட்டு மொழிபெயர்ப்பு நூல்கள் பயன்படுகின்றன. இத்தகைய வழிகளில் இடையறாது பணியாற்றி வரும் டிரஸ்ட் மேன்மேலும் வளர ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அனைவரது கடமையாகும்.

எம். பக்தவத்சலம்,

முதலமைச்சர், சென்னை மாநிலம்.

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் வெளிவரும்
குழந்தைப் புத்தகங்களுக்கு
திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
எஸ். கோவிந்தராஜுலு, எம். ஏ., எல்.எல்.பி., பி.எல். பாரட்லா
அவர்களின்

பொதுவுரை

இந்தப் புத்தகங்கள் குழந்தைகளுக்கானவை. குழந்தைகள் மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும். பெரியவர்கள் அறிந்தவற்றை யெல்லாம் குழந்தைகள் படிப்படியாகக் கற்றுக்கொள்ள உதவி செய்யப்பட வேண்டும். குழந்தைகளுக்கு உற்சாகம் ஊட்டவும், அவர்களின் அறிவை வளர்க்கவும் புத்தகங்கள் உதவுகின்றன.

இந்தப் புத்தகங்கள் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் வெளிவருகின்றன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் குறைந்த விலையில் நல்ல புத்தகங்களை வெளியிடுவதே இந்த டிரஸ்டின் நோக்கமாகும்.

இந்தப் பணியைச் செய்வதற்கு அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த ஹென்றி போர்ட் (Henry Ford) என்னும் பெரியார் ஏற்படுத்தியுள்ள தரும ஸ்தாபனத்திலிருந்து பொருள் உதவி கிடைத்து வருகிறது. மோட்டார் வண்டிகள் உற்பத்தியினாலும், மற்ற வாணிபத்தினாலும் அவர் நிறையப் பணம் சம்பாதித்தார். தாம் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியைப் பிறருக்கு உதவுவதற்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறார். ஆனால், அந்த உதவி குறிப்பிட்ட தேசத்திற்காக மட்டுமன்று.

மனித சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்று ஆசைப்படுவது ஓர் உயர்ந்த நோக்கமாகும். தேச, மத வேறுபாடின்றி அந்த நோக்கத்தை நிறைவேற்றுவது ஒரு சிறந்த பணியாகும்.

எஸ். கோவிந்தராஜுலு,
தலைவர், தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்.

1. இளவரசன் எங்கே?

மருங்காபுரி இளவரசன் வீரசிம்மனுக்கு அன்று ஐந்தாவது பிறந்த நாள். ஆகவே அன்று மருங்காபுரியே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து கிடந்தது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள், தெருவெங்கும் கோலங்கள். மக்கள் மனதில் அளவிட முடியாத ஆனந்தம். நகரமே திருவிழாக் கோலத்தோடு காட்சியளித்தது. மக்கள் தங்கள் நாட்டு இளவரசனிடம் அதாவது வருங்கால அரசனிடம் அவ்வளவு அன்பு வைத்திருந்தனர். அங்கங்கே அவர்கள் கூடிக் கூடிப் பாடி, ஆடிக் களித்தனர். மருங்காபுரி பெண்கள் அனைவரும் தங்கள் மகனுக்கே பிறந்த நாளென நினைத்துச் சொல்ல முடியாத மகிழ்ச்சி அடைந்தனர்.

அரண்மனை அன்று அழகு தேவதையால் அலங்கரிக்கப்பட்டது போல அவ்வளவு பிரமாதமாக இருந்தது. அரச சபையின் அழகு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அரசன் மார்த்தாண்டரும் அரசி பத்மாவதியும் அரச சபைக்குள் நுழைந்தபோது அனைவரும் எழுந்து நின்றார்கள். அரசனும் அரசியும் அமர்ந்த

வுடன் அனைவரும் அவரவர்கள் இடத்தில் அமர்ந் தார்கள். அரசன் அரசி இருவர் முகத்திலும் ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர்களுக்குப் பிறந்த பிள்ளை வீரசிம்மன். அழகு மிகுந்தவன்; வீரம் நிறைந்தவன்; புத்திசாலி. ஆகையால் அவர் களுக்குத் தங்கள் மகனைப்பற்றி பெருமை அதிகம். ஆனால் அன்று அவர்களுக்கு மனத்தில் சிறிது வருத்தமும் இருந்தது. ஏனென்றால் அன்று பிறந்த நாள் விழா முடிந்தவுடன் தங்கள் குமாரன் வீரசிம்மன் தங்களைப் பிரிந்து விடுவானே என் பதுதான். கல்வி கற்கவும், குருகுலவாசம் செய்யவும் அடுத்த நாளே அவன் போக வேண் டும்; இதை நினைத்துத்தான் அவர்கள் வருந்தி னார்கள். தங்கள் குழந்தையை விட்டுப் பிரிய எந்தப் பெற்றோருக்குத்தான் வருத்தமாக இருக் காது?

மருங்காபுரி நாட்டின் மந்திரி அமரசிம்மர் அறிவு மிக்கவர். நாட்டிற்காக எதையும் செய்யக் கூடியவர். அவரது மகன் மதிவாணன் தனது தந்தையைப் போலவே அறிவிற் சிறந்தவன். இளவரசன் வீரசிம்மனது நெருங்கிய நண்பன். வீரசிம்மனையும் மதிவாணனையும் எங்கும் தனித் தனியாகப் பார்க்க முடியாது. எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். இருவரும் இணை பிரி யாத நண்பர்கள். அடுத்தநாள் இளவரசன் குரு குலவாசம் செய்யப் போகும்போது மதிவாண னும் கூடவே சென்றான்.

மார்த்தாண்டர் அமரசிம்மரைப் பார்த்து ''மந்திரியாரே! நாளை இளவரசனும் உமது குமாரனும் குருகுலவாசம் செய்யச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டீரா?'' எனக் கேட்டார்.

அமரசிம்மர் ''அரசே! அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்து விட்டேன். இன்று நமது குலகுரு பரமானந்தர், இளவரசர் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக வருகிறார். நாளைக் காலை இவர் கிளம்பும்போது இருவரையும் அவருடனே அழைத்துச் செல்வார்!'' எனக் கூறினார்.

''இருவரும் ஒருவருக்கொருவர் அன்பாக இருக்கிறார்கள். இந்த அன்பு கடைசிவரை நீடிக்க ஆண்டவன் அருள்புரிய வேண்டும்'' என்று அரசி பத்மாவதி கூறினாள்.

அப்பொழுது ஒரு சேவகன் உள்ளே வந்து வணங்கி ''அரசே! நமது குலகுரு பரமானந்தர் அவர்கள் வருகிறார்கள்!'' என அறிவித்தான்.

''அப்படியா! மந்திரியாரே! அவரை உடனே உள்ளே அழைத்து வாருங்கள்!'' என மார்த்தாண்டன் கூறினார்.

பரமானந்தர் வந்தவுடன் அனைவரும் அவையில் அவருக்கு வணக்கம் செலுத்தினார்கள். அவரது முகத்தில் அமைதி நிரம்பி யிருந்தது.

அருளும், அறிவும் மிக்கவர் என்பது பார்த்த வுடனே தெரிந்தது.

அரசனும் அரசியும் அவரது கால்களிலே விழுந்து வணங்கினுர்கள். பரமானந்தர் அவர் களே வாழ்த்தினுர்.

''மார்த்தாண்டா! மங்களம் உண்டாகுக! இந்த நாடும் மக்களும் நலமாக வாழ்வார்களாக! இளவரசன் வீரசிம்மனேயும் மந்திரி மகன் மதி வாணனேயும் நாளேக்கு என்னுடன் அனுப்ப வேண்டிய ஏற்பாடுகளேச் செய்து விட்டாயா?'' என அவர் கேட்டார்.

''ஆம் சுவாமி! எல்லா ஏற்பாடுகளேயும் மந்திரியார் செய்து முடித்து விட்டார். ஆனுல் அவர்களே எப்படிப் பிரிந்திருப்பது என்பதை நினேக்கும்போதுதான் வருத்தமாக இருக்கிறது'' என்ருர் மார்த்தாண்டர்.

''மார்த்தாண்டா! வருத்தப்படாதே! கல்வி மனிதனுக்கு மிகவும் அவசியம். கல்வியறி வில்லாதவன் கண்ணில்லாதவனுக்குச் சமம். உன் மகனும், மதிவாணனும் சிறந்த கல்வி அறிவு பெற்று, புகழோடு வாழப் போகிருர்கள்; அதைப் பார்த்து நீ மகிழும் காலம் வரத்தான் போகிறது. ஆகவே மகிழ்ச்சியோடு அவர்களே என்னுடன் அனுப்பி வை!'' என்ருர் பரமானந்தர்.

''சுவாமி! எல்லாம் தங்கள் கருணே! தாங்கள் தான் வீரசிம்மனுக்கும், மதிவாணனுக்கும் தாய், தந்தை எல்லாம்!'' என மன்னர் கூறினுர்.

பரமானந்தர் "எங்கே வீரசிம்மனும் மதிவாணனும்? அவர்களைக் கூப்பிட்டு வரச்சொல்!" என்றார்.

உடனே அமரசிம்மர் ஒரு காவலனைக் கூப்பிட்டு "இளவரசரும் மதிவாணனும் அவர்கள் அறையில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். உடனே அவர்களை அழைத்து வா" எனக் கட்டளையிட்டார்.

காவலாளி இளவரசனது அறையை நோக்கி ஓடினான். உள்ளே....?

ஒருவரும் இல்லை. பக்கத்து அறைகளிலும் தேடினான். எங்குமே இளவரசனைக் காணோம்! சற்று நேரத்திற்கு முன்புகூட இங்கே இருந்தார்களே! எங்கே அவர்கள்?

அரசவைக்கு ஓடிவந்து இளவரசனையும், மதிவாணனையும் காணவில்லை என்றவுடன் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இளவரசன் பிறந்த நாள் விழாவைக் கண்டு களிக்க வந்தவர்கள் அனைவரும் திடுக்கிட்டனர். மார்த்தாண்டரும், பத்மாவதியும் திகைப்படைந்தார்கள். மந்திரி அமரசிம்மர் எல்லாக் காவலாளிகளையும் கூப்பிட்டு, அரண்மனை முழுதும் தேடச் சொன்னார்.

அரண்மனையிலிருந்தோர் அனைவர் மனத்திலும் ஒரே ஒரு கேள்விதான் நிரம்பி யிருந்தது.

"இளவரசன் எங்கே?" என்பதுதான் அது.

2. சூனியக்காரி !

அரண்மனையில் இருந்தவர்கள் எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். இளவரசனைத் தேடி அரண்மனை முழுதும் இங்குமங்கும் காவலர்கள் ஓடினார்கள்.

அந்தச் சமயம்தான் மதிவாணன் அரச சபைக்குள் ஓடிவந்தான். அவன் ஆடைகள் எல்லாம் கசங்கி இருந்தன. தலை மயிரெல்லாம் கலைந்து கிடந்தது. ஓடிவந்ததில் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

மந்திரியைப் பார்த்து "அப்பா . . . அப்பா ! . . கிழவி, கிழவி ! வீரசிம்மன்" என்று கூவினான்.

"என்னடா, என்ன மதிவாணா ! யார் கிழவி ? வீரசிம்மன் எங்கே? நிதானமாகச் சொல்லு" என்றார் அமரசிம்மர்.

"அப்பா ! நானும், வீரசிம்மனும் அறைக்குள் விளையாடிக் கொண்டிருந்தபோது உள்ளே ஒரு பெண் வந்தாள்; கிழவிபோல் இருந்தாளப்பா ! கண்ணெல்லாம் பார்க்க பயமாயிருந்தது ! அவள்

வந்து உங்களுக்கு ''பாடற கரடி, ஆடற புலி இது போல பல அதிசயங்களை யெல்லாம் காண்பிக்கி றேன், வாங்க'' என்று சொல்லித் தோட்டத்துக்கு அழைத்துக்கொண்டு போனுள். ஆனு ஒண்ணும் காண்பிக்கல்லே. வீரசிம்மனைத் தூக்கிட்டு ஓடப் பார்த்தா! ஆனு வீரசிம்மன் கத்தியைத் தூக்கி அவளைக் குத்தப் போனுன்! நான் உங்ககிட்ட சொல்ல ஓடி வந்தேன்! வாங்கப்பா!'' என்று ஒரே மூச்சில் எல்லாவற்றையும் சொல்லி முடித் தான் மதிவாணன்.



உடனேயே எல்லோரும் தோட்டத்துக்கு ஓடினுர்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி!

இளவரசன் கையில் ஒரு கத்தியோடு நின்று கொண்டிருந்தான். அவனெதிரெ ஒரு பெண் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் கோவைப் பழம் போல சிவந்திருந்தது. கறுப்புப் புடவை கட்டிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவே பயமாக இருந்தது.

''வந்துவிடு! வீரசிம்மா! வந்துவிடு!'' என்று அவள் கூறிக் கொண்டிருந்தாள்.

வீரசிம்மனோ சிறுவனாக இருந்தபோதிலும் சிறிதும் பயப்படாது கத்தியைக் காட்டியபடி ''ஏய் கிழவி! போய்விடு! போய்விடு! கொன்று விடு வேன்!'' என மிரட்டிக் கொண்டிருந்தான்.

அவளது பயங்கர உருவத்தைக் கண்டு சில ருக்கு நடுக்கமாகக் கூட இருந்தது. எல்லோரை யும் கண்டதும் அந்தப் பெண் திரும்பி ஓடப் பார்த் தாள்.

அமரசிம்மர் கட்டளையிடவும் ஐந்தாறு காவற் காரர்கள் அந்தக் கிழவியைச் சூழ்ந்துகொண் டார்கள். அவள் மிரள மிரள விழித்தாள். அவள் முகம் மேலும் பயங்கரமாக மாறிற்று.

''யார் நீ?...எதற்கு இளவரசனை தூக்கிக் கொண்டு போக முயற்சிக்கிறாய்? உண்மையைச் சொல்!'' என மிரட்டினார் அமரசிம்மர்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. ''ஹாஹ்ஹா!'' என பற்களெல்லாம் வெளியே தெரியும்படி பயங்கரமாகச் சிரித்தாள்.

குரு பரமானந்தருக்கு அவளை எங்கேயோ முன்பு பார்த்ததுபோல் இருந்தது. அவளருகில் நெருங்கி "உண்மையைச் சொல்!...நீ சூனியக் காரி நீலிதானே?" என அதட்டினுர்.

"ஆமாம்!...ஆமாம்! அவளேதான்...!" எனக் கூறி மேலும் பயங்கரமாகச் சிரித்தாள் அவள்.

"நான் நினைத்தால் எல்லோரையும் சுட்டு விடுவேன்!...சாம்பலாக்கி விடுவேன்!...இந்த ஊரையே சுடுகாடாக்கிவிடுவேன்! தெரியுமா?— இளவரசனைக் கொடுத்துவிடு! நான் போய்விடு கிறேன்!" என்று கூறிப் பலமாகச் சிரித்தாள். அது பேய் சிரிப்பதுபோல இருந்தது. "மார்த்தாண்டா!... இவளை உனக்குத் தெரிய வில்லையா!.. வீரசிம்மன் முதலாவது பிறந்தநாள் விழாவின் போது, குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடப்பார்த்தாளே நீலி, அவளேதான் இவள். ஒரு பெரிய சூனியக்காரி. கெட்ட தேவதைகளை யெல்லாம் கைவசப் படுத்திக் கொண்டு எல்லோருக்கும் துன்பத்தைக் கொடுத்து வருகிருள்" என பரமானந்தர் சொல் லிக் கொண்டு வரும்போதே, அவள் "ஆமாம்! நான்தான்! நீலி, சூனியக்காரி" எனக் கூச்ச லிட்டு மேலும் பெரிதாகச் சிரித்தாள். அவளைப் பார்க்கவே அருவருப்பாய் இருந்தது.

"அரசே! அன்று போனல் போகிறதென்று இவளை எச்சரிக்கை செய்து அனுப்பிவிட்டோம். ஆனல் இவள் திருந்தவில்லை. இளவரசனைக்

கடத்திக் கொண்டுபோகவே இவள் வந்திருக்கிருள். இவளுக்குக் கருணை காட்டுவதே பாவம்! இவளை இப்போதே கண்டதுண்டமாக வெட்டிப் போடவேண்டும்!'' என தனது வாளை உருவினுர் அமரசிம்மர்.

அவள் சிரித்துக் கொண்டேயிருந்தாள். ஆந்தை அலறுவது போல இருந்தது அவள் சிரிப்பு.

பரமானந்தனர், அமரசிம்மரைச் சமாதானப் படுத்தினுர். ''அமரசிம்மா! பொறு! இவள் ஒரு பெண்ணுக இருக்கிருள். இவளை கொலை செய்ய வேண்டாம்!. .'' என்று கூறி மார்த்தாண்டரைப் பார்த்து, ''மார்த்தாண்டரே! நாளைக்கே இவளையும், இவளது மகனையும் நாடுகடத்திவிடு!'' ஒரு படகில் வைத்து கடலில் விட்டுவிடு! நம் நாட்டை விட்டே இந்தச் சனியன் ஒழியட்டும்!...எனக் கூறினுர்.

அப்பொழுதும் அவள் விகாரமாகச் சிரித்துக் கொண்டே யிருந்தாள்.

மார்த்தாண்டர் உடனே சேனுபதியைக் கூப்பிட்டு ''இவளை இன்று சிறையில் வையுங்கள்! நாளைக் காலையில் இவளையும், இவளது மகனையும் நாடு கடத்த ஏற்பாடு செய்யுங்கள்!'' என உத்தரவிட்டார்.

அவள் கைகளுக்கு விலங்கிடப் பட்டு சிறைச் சாலைக்குக் கொண்டு போகும்போது, திரும்பிப்

பார்த்துக்கொண்டே "விடமாட்டேன்! விடமாட்டேன்!" என்று முணுமுணுத்துக் கொண்டே போனுள் அந்த சூனியக்காரி.

"சுவாமி! நல்லவேளையாக ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பினேம்" என வீரசிம்மனை அணைத்தவாறு கூறினர் மார்த்தாண்டர்.

"கவலைப்படாதே!...நல்லவர்களுக்கு நல்லனவே நடக்கும்!" எனக் கூறினர் பரமானந்தர். வீரசிம்மனும், மதிவாணனும் அவரை வணங்கினர்கள்.

"சிறுவர்களே! உங்கள் நட்பு என்றைக்கும் நிலைத்திருக்கட்டும்" என்று வாழ்த்திவிட்டு "வீரசிம்மா! நீ உண்மையிலேயே வீரன்தான்! சூனியக்காரியையே பயமுறுத்திவிட்டாயே!" என அவனைத் தட்டிக்கொடுத்தார். எல்லோரும் மீண்டும் அரச சபைக்குத் திரும்பினர்கள்.

3. கல்வியே கண்கள்

மறுநாள் காலை, சூனியக்காரி நீலியையும் அவளது மகன் குலசேகரனையும் ஒரு படகில் வைத்து நாடு கடத்த ஏற்பாடுகள் செய்தார் அமரசிம்மர். நீலி கோபத்தில் குதித்தாள். ஆனால் அமரசிம்மர் அவளை இலட்சியம் செய்யவே இல்லை. படகு புறப்படும்போது கூட நீலி ''அமரசிம்மரே! இந்த நீலி இதற்குப் பழிக்குப்பழி வாங்குவாள்! வீரசிம்மனை என்றைக்காவது நான் பிடித்தே தீருவேன்!'' என்று கூறினாள். அவளது கத்தலை சிறிதும் மதியாது படகு நகர ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் கண்களிலிருந்து அப்படகு மறைந்தது.

அமரசிம்மர் அரண்மனைக்குத் திரும்பி வந்த போது வீரசிம்மனும், மதிவாணனும், பரமானந்தருடன் கிளம்பத் தயாரானார்கள். அரசருக்கும், மந்திரிக்கும் தங்கள் குழந்தைகளைப் பிரிந்திருக்கப் போவது மிக வருத்தமாக இருந்தது. பரமானந்தர் அவர்களைத் தேற்றினார்.

பிறகு மூவரும் ரதத்தில் ஏறி பரமானந்தருடைய ஆசிரமத்துக்குப் புறப்பட்டனர். மார்த்

தாண்டரும், அமரசிம்மரும் ரதம் போன வழியே பார்த்துக் கொண்டிருந்தனர். பத்மாவதி தேவி யின் கண்களில் நீர் பெருகியது.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. வருடங்கள் ஓடிக்கொண்டே இருந்தன. நடு நடுவிலே வீரசிம்மனும், மதிவாணனும் மருங்கா புரிக்கு வந்து போனார்கள். ஆனால், பெரும் பாலான நேரத்தை ஆசிரமத்தில் கல்வி பயிலு வதிலேயே செலவழித்தனர்.

பரமானந்தர் கல்வியிலே கடல் போன்றவர். அவர் வீரசிம்மனுக்கும், மதிவாணனுக்கும் எல்லாப் பாடங்களிலும் பயிற்சி அளித்தார். இருவரும் படிப்பிலும், வீரத்திலும் சிறந்து விளங் கினர். ஈடு இணை இல்லாத அறிவாளிகளாயும், வீரர்களாயும் விளங்கிய அவர்களைப் பார்த்து பரமானந்தர் பெருமைப்பட்டார்.

பரமானந்தர் வீரசிம்மனுக்கு மந்திர வித்தை களையும் பழக்கிவைத்தார். வீரசிம்மன் அதிலும் சிறந்த பயிற்சி பெற்றான்.

இவ்வாறாக பல வருடங்கள் கழிந்தன. திரும் பவும் இருவரும் மருங்காபுரி செல்லவேண்டிய காலம் வந்தது. அவர்கள் பரமானந்தர் கால் களில் விழுந்து வணங்கினார்கள்.

''குருவே! தாங்கள் இத்தனை காலம் எங்க ளுக்குத் தாயாகவும், தந்தையாகவும், ஆசிரிய ராகவும், தெய்வமாகவும் இருந்தீர்கள். ஒருவன் கல்வியறிவு பெற்றபின் முழு மனிதனாகிறான். எங்களை எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெறச்

செய்து அறிவூட்டி முழு மனிதனாக்கி இருக்கிறீர்கள்! நீங்களே எங்களது கண்கண்ட கடவுள்! எனப் போற்றினார்கள்.

பரமானந்தர் சொன்னார்: "குழந்தைகளே! இப்போது நீங்கள் வாலிபராகி விட்டீர்கள்! எல்லா விஷயங்களிலும் சிறந்த தேர்ச்சியும் அறிவும் அடைந்துவிட்டீர்கள். நான் இப்போது சொல்வதைக் கேட்டு அதை கடைசிவரை பின்பற்ற வேண்டும்! எக்காரணத்தைக்கொண்டும் நீங்கள் இருவரும் பிரியக்கூடாது. இப்படியே அண்ணன், தம்பிபோல் கடைசிவரை வாழ்ந்து நாட்டை நல்லமுறையில் ஆள வேண்டும். நீங்கள் பெற்றிருக்கும் அறிவையும் வீரத்தையும் நல்லவர்களுக்காகவும், கஷ்டத்தில் வருந்துபவர்களுக்காகவும் பயன்படுத்துங்கள். நல்லவைக்காக உயிரையும் கொடுத்து போராடுங்கள். தீயவைகளை உயிரைக் கொடுத்தாவது அழியுங்கள்! நல்ல சக்திகள் நன்றாக வாழவும் தீய சக்திகள் ஒழியவுமே நான் அளித்த அறிவையும், திறமையையும் பயன்படுத்துங்கள்! கல்வியின் உண்மையான நோக்கமும் அதுவே!" என்று புத்திமதிகள் சொன்னார்.

தங்கள் ஆணைப்படியே வாழ்வோம்! எங்களை வாழ்த்துங்கள்!" என்று வீரசிம்மனும் மதிவாணனும் மீண்டும் அவரைப் பணிந்தார்கள்.

பரமானந்தர் அவர்களை வாழ்த்தி மருங்காபுரிக்கு அனுப்பிவைத்தார்.

4. பாம்பு தந்த பரிசு!

கல்வியை முடித்துக்கொண்டு சிறந்த அறிவாளிகளாயும் வீரர்களாயும் திரும்பிவரும் தங்கள் குமாரர்களைக் கண்டு அரசரும், மந்திரியும் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். இராணி பத்மாவதி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வீர சிம்மனை பெற்ற போது இருந்ததைக் காட்டிலும் அதிக ஆனந்தம் அடைந்தாள்.

மார்த்தாண்டர் வீரசிம்மனைத் தழுவிக் கொண்டார். வீரசிம்மரும், மதிவாணனும் அரசரையும், மந்திரியையும் வணங்கி ஆசி பெற்றுர்கள்.

சிறிது காலம் சென்றது. மார்த்தாண்டர் இப் போது வயதானவராகி விட்டார். வீரசிம்மனே இருபது வயதடைந்து வீர வாலிபனுக விளங்கினுன். ஆகவே அவனுக்கு முடிசூட்டி அரசனுக்க மார்த்தாண்டர் விரும்பினுர். அரசசபையில் உள்ளவர்களும் அதையே விரும்பினுர்கள். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார் மந்திரி அமரசிம்மர்.

அரசனுவதற்கு முன்பு நாடு முழுதும் சுற்றிப் பார்த்து, நாட்டு நிலையை அறிவது அக்கால வழக்கம். வீரசிம்மனும் அவ்வாறு செய்ய விரும்

பினுன். ஆகவே வீரசிம்மனும் மதிவாணனும் தங்கள் தாய் தந்தையர்களிடம் விடை பெற்றுக் கொண்டு நாட்டுவளப்பம் காணப் புறப்பட்டார்கள். இருவரும் குதிரைகளில் ஏறிக் கொண்டு மருங்கா புரியை விட்டுக் கிளம்பினுர்கள்.

மருங்காபுரி ஒரு பெரிய நாடு. வீரசிம்மனும் மதிவாணனும் ஒவ்வொரு ஊராகப் பார்த்துக் கொண்டு போனுர்கள். அந்த ஊர் மக்களைப் பற்றிக்கேட்டு அறிந்து கொண்டார்கள். எல்லா மக்களும் அமைதியாகவும், குறைவில்லாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள் என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இவ்வாறு நாட்டின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்து விட்டுக் கடைசியாக மருங்காபுரி தேசத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள்.

எல்லைக்கு அப்பால் இருந்த நாடு மங்களாபுரி. அங்கு ஒரு அழகிய தோட்டம் இருந்தது. அது மங்களாபுரி மன்னன் இராஜவர்மனுடையது. எல்லாவகை மலர்ச்செடிகளும் அத்தோட்டத்தில் இருந்தன. தூரத்தில் இருந்து பார்ப்பதற்கே மிக அழகாக இருந்தது அந்தத் தோட்டம்.

வீரசிம்மனும், மதிவாணனும் அவ்வழகைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று தோட்டத்தின் உள்ளேயிருந்து "ஐயோ" என்ற சத்தம் கிளம்பியது. இருவரும் திடுக்கிட்டனர். வீரசிம்மன் எல்லையைத் தாண்டி அந்தப்

பக்கம் குதித்து குரல் வந்த திசையை நோக்கி ஓடினான். சிறிது தூரம் ஓடியவுடன் திடீரென்று ஒரு செடி மறைவில் நின்றான். அங்கு . . .

ஒரு அழகான பெண் நின்றுகொண்டிருந் தாள். அவளெதிரே படமெடுத்தபடி அவளை நோக்கி சீறிக்கொண்டிருந்தது ஒரு பெரிய பாம்பு.

வீரசிம்மன் உருவிய வாளுடன் முன்னே பாய்ந்தான். அவனைக் கண்டதும் அந்தப் பாம்பு



இன்னும் பலமாகச் சீறியது. அந்தப் பெண் நடுங்கிக் கொண்டே நின்றாள்.

வீரசிம்மன் தன் குருவை மனதில் நினைத்துக் கொண்டே, வாயால் நாகவசிய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே வாளை ஓங்கினான். அந்த மந்திரத்தைக் கேட்டவுடன் பாம்பு தனது தலையைக் கீழே போட்டு விட்டது. அப்பொழுது அதன் தலையில் இருந்த மாணிக்கம் உருண்டு வீரசிம்மன் காலடியில் வீழ்ந்தது. வீரசிம்மன் திரும்பவும் வாளை ஓங்கினான்.

''வேண்டாம்! கொல்லாதே! விட்டுவிடு!!'' என்ற குரல் கேட்டது. வீரசிம்மன் திரும்பிப் பார்த்தான் யார் பேசுவதென்று. அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை. யார் பேசியது என்றே புரியவில்லை. திரும்பவும் ''என்னை விட்டுவிடு'' என்ற குரல் கேட்டது. வீரசிம்மனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் பேசியது பாம்பு தான். வீரசிம்மன் வாளை உறையில் போட்டுவிட்டுப் பாம்பைப் பார்த்தான். பாம்பு பேசியது.

''வீரசிம்மா!... என்னை விட்டுவிடு!... நான் சாதாரண பாம்பல்ல! என்னைச் சேர்ந்த எல்லோரும் பவழத்தீவில் வசிக்கிறார்கள். பாம்புக் கூட்டத்தின் தலைவனாகிய நாகவர்மனுடைய அண்ணன் நான். என்னை எளிதில் யாரும் கொல்ல முடியாது ஆனால் உனக்கு நாகங்களைக் கொல்லும் மந்திரம் தெரிந்திருக்கிறது. தயவு செய்து என்னை விட்டுவிடு. இந்த மாணிக்கக் கல்லை எடுத்துக்கொள். இதனால் உனக்குப் பல

சௌகரியங்கள் கிடைக்கும். முக்கியமாக இதைப் பார்த்தால் எந்தப் பாம்பும் உனக்கு எல்லா உதவி யும் செய்யும்! என்னை விட்டுவிடு'' என அந்தப் பாம்பு கெஞ்சியது.

''ஏ பாம்பே! இனிமேல் யாரையும் கடிப்ப தில்லை என்று சத்தியம் செய்தால் விட்டு விடு கிறேன்'' என்றான் வீரசிம்மன். அந்தப் பாம்பு அவ்வாறே தன் தலையால் தரையில் தட்டி சத் தியம் செய்து கொடுத்தது.

''சரி! ஓடிப்போ!'' என்றான் வீரசிம்மன். அப் பாம்பும் சர சர வென்று ஓடி மறைந்தது.

5. மங்கள சுந்தரி

வீரசிம்மன் அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தான். அவள் இன்னமும் நடுங்கிக் கொண்டேயிருந்தாள் அதோடு விலையுயர்ந்த ஆடை அணிகளையும் அணிந்திருந்தாள். ஒரு அரச குமாரியைப் போலிருந்தாள்.

''நீ யாரம்மா?'' என விசாரித்தான் வீர சிம்மன்.

''நான் மங்களபுரி அரசன் ராஜவர்மனுடைய மகள். என் பெயர் மங்கள சுந்தரி. என் தோழிக ளோடு இங்கு விளையாட வந்தேன். இந்த மரத் தடியில் ஒளிந்து கொள்ளும் போது பாம்பு வந்து விட்டது. நல்ல வேளையாக நீங்கள் வந்தீர்கள். இல்லாவிட்டால் நான் இறந்தே போயிருப்பேன். உங்களுக்கு என் நன்றி'' என்று அவள் கூறித் தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

வீரசிம்மன் தான் யாரென்றும், தான் அங்கு வந்த காரணத்தையும் சொன்னான். மங்கள சுந்தரிக்கு, வீரசிம்மன் அழகும் வீரமும் அறிவும் மிகவும் பிடித்திருந்தன. அவனையே கல்யாணம்

செய்து கொள்ள விரும்பினாள். வீரசிம்மனும், மங்களசுந்தரியை விரும்பினான். அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது மதிவாணன் அங்கு வந்து சேர்ந்தான். நடந்தது அறிந்து தன் நண்பனைப் பாராட்டினான். வீரசிம்மனும், மங்கள சுந்தரியும் ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதையும் அறிந்தான்.

மங்களசுந்தரி மங்களபுரி மன்னன் ராஜவர்ம னின் ஒரே மகள். அவளுக்குத் தகுந்த கணவ னைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு ஏற்பாடு செய் திருந்தான். அந்த அரசன் பல தேச அரசர்களை வரவழைத்திருந்தான். சிறந்த வீரமுள்ள, அறிவுள்ள மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதற் காக வருகிறவர்களுக்கு சில போட்டிகள் வைத் திருந்தார் ராஜவர்மர். இதையெல்லாம் மங்கள சுந்தரி வீரசிம்மனுக்கும் மதிவாணனுக்கும் சொன்னாள்.

வீரசிம்மனும், மதிவாணனும் ஆலோசித் தார்கள். பிறகு மங்களபுரிக்குச் சென்று அந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதென்று தீர்மானித் தார்கள். பிறகே தங்கள் நாட்டுக்குத் திரும்புவ தென்று முடிவு செய்தார்கள். மங்களசுந்தரி இந்த முடிவைக்கேட்டு மிக மகிழ்ச்சி அடைந் தாள். ஏனென்றால் வீசிம்மனைத்தான் கல்யாணம் செய்து கொள்வதென்று அவள் தீர்மானித்து விட்டாள். அவனது வீரம், அழகு ஆகியவை அவளைக் கவர்ந்து விட்டன.

இதற்குள் மங்களசுந்தரியின் தோழிகள் அங்கு வந்தனர். அவள் அவர்களோடு அந்தத் தோட்டத்தை விட்டுச் சென்ருள். ஆனல் அவள் மனது முழுவதும் வீரசிம்மனிடமே இருந்தது.

வீரசிம்மனும் மதிவாணனும் தங்கள் குதிரைகளை நிறுத்தியிருக்கும் இடத்திற்கு வந்தார்கள். மறுநாள் மங்களபுரியில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகக் குதிரைகளில் ஏறிப் புறப்பட்டார்கள். என்ன போட்டி வைப்பார்கள் என்பது புரியவில்லை. ஆனல், அந்தப் போட்டிகள் அறிவுத் திறமையைப் பரிசோதிப்பதாக இருக்கும் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

அடுத்தநாள் காலை இருவரும் மங்களபுரியை அடைந்தார்கள். அன்று அந்நாட்டு அரசகுமாரி திருமணத்திற்காகப் போட்டிகள் நிகழப்போவதால் ஊரெல்லாம் அலங்காரம் செய்திருந்தார்கள்.

வீரசிம்மனும், மதிவாணனும் அந்த ஊரில் இருந்த விருந்தினர் விடுதியில் போய்த் தங்கினுர்கள். எல்லோரும் போட்டியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவருக்காவது போட்டியில் என்னென்ன பகுதிகள் இருக்கும் என்று தெரியவில்லை.

அந்த அரசகுமாரர்களுக்குள்ளேயே மிக ஆடம்பரமாகவும், அலட்சிய மனப்பான்மையுடனும் இருந்தான் பவழத்தீவு அரசன் பலதேவன். தான் மிகச் சிறந்த வீரன் என்ற

எண்ணம் அவனுக்கு. ஆகவே, யாரையும் அவன் லட்சியம் செய்யவே இல்லை. திருமணப் போட்டியில் தானே வெற்றிபெறுவோம், மற்ற அரசகுமாரர்களைக் காட்டிலும் தானே மிகச் சிறந்தவன் என்ற இறுமாப்போடு இருந்தான் அவன். கர்வம் பிடித்தவன் என்பது பலதேவ னுடைய முகத்திலேயே தெரிந்தது.

அப்பொழுது மங்களபுரி அரசர் ராஜவர்மர் அங்கு வந்தார். அரசகுமாரர்களை யெல்லாம் பார்த்து "வீரர்களே! எனது குமாரி மங்கள சுந்தரிக்கு ஏற்ற மணமகனைத் தேர்ந்தெடுக்க நான் போட்டிகள் வைத்திருப்பது உங்களுக்குத் தெரியும். அப் போட்டிகளை உங்களது அறிவுத் திறமையையும், கல்வி அறிவையும் பரிசோதிப் பதற்காகவே வைத்திருக்கிறேன். இன்று மாலை அனைவரும் எனது அரச சபைக்கு வரும்படி கேட்டுக்கொள்கிறேன். அங்கே அந்தப் போட்டி கள் நடைபெறும்" என்று கூறிவிட்டுத் தனது அரண்மனைக்குச் சென்றார்.

அரசகுமாரர்கள் மீண்டும் போட்டிகள் பற்றி யோசிக்க ஆரம்பித்தார்கள். மாலைப்பொழுது வந்தது அனைவரும் அரண்மனைக்குப் புறப்பட்ட னர். அரச சபையை அடைந்த அரசகுமாரர்கள் தங்களுக்காகப் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர். அச்சபையில் மக்களும், மந்திரி பிரதானிகளும், காவலர்களும், மற்றும் பலரும் நிறைந்திருந்தனர். இராணியும் அரசகுமாரி

மங்களசுந்தரியும் ஒருபுறத்தில் அமர்ந்திருந்தனர். சபையில் நிசப்தம் நிலவியது. அனைவரும் அரசர் என்ன சொல்லப் போகிறார் என்று அவரையே பார்த்தவாறு இருந்தனர். அரச சபையை ஒரு முறை பார்த்துவிட்டு அரசர் எழுந்திருந்தார். அரச குமாரர்கள் ஆவலோடு கவனித்தனர்.

அரசர் ஆரம்பித்தார்.

"அரச குமாரியை மணந்துகொள்ள வந்திருக்கும் பல தேசத்து அரச குமாரர்களே! மந்திரி பிரதானிகளே!! என் அருமை மக்களே!!! உங்கள் அனைவரையும் வரவேற்கின்றேன். எனது ஒரே மகள் மங்களசுந்தரி அழகிலும், அறிவிலும் மிகச் சிறந்தவள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவளுக்குத் தகுந்த மணமகனைத் தேர்ந்தெடுக்கத்தான் உங்கள் எல்லோருடைய முன்பும் இந்தப் போட்டிகள் நடக்கின்றன. இப் போட்டியில் முதல் பகுதியை நான் நடத்தப் போகிறேன். இங்கு வந்துள்ள அரசகுமாரர்களுக்கு மூன்று காரியங்கள் கொடுக்கப்போகிறேன். இக் காரியங்களைச் செய்து முடிப்பது அவரவர்களின் புத்திக் கூர்மையைப் பொறுத்துள்ளது. அடுத்த பகுதியில் எனது மகள் மங்களசுந்தரி வந்திருக்கும் அரசகுமாரர்களை மூன்று கேள்விகள் கேட்பாள். அக்கேள்விகளால் அரச குமாரர்களது கல்வியறிவு வெளிப்படும். எவர் நான் சொல்கிற காரியங்களைச் செய்து முடித்து, மங்களசுந்தரியின் கேள்விகளுக்கும் சரியான பதில் சொல்கிறாரோ அவரே மங்களசுந்தரியை

மணக்கலாம். அதோடு என் ராஜ்யத்தையும் அவருக்கே ஒப்படைப்பேன்''. என்று போட்டி களைச் சொல்லி முடித்தார்.

எல்லா அரச குமாரர்களும் என்ன காரியங் களை அரசர் செய்யச் சொல்லப் போகிருரோ, மங்களசுந்தரி கேள்வி என்னவாயிருக்குமோ என்ற சிந்தனையில் மூழ்கி இருந்தனர். பலதேவன் கர்வத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். மகா பலசாலியான தான் செய்ய முடியாத காரியம் உலகத்தில் உண்டா, மகா புத்திசாலியான தான் பதில் சொல்ல முடியாத கேள்விகளும் உண்டா என நினைத்துக் கொண்டான். மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான். எல்லோரும் அரசர் சொல்லப் போகும் போட்டிகளைக் கவனத்துடன் கேட்டனர்.

''அரசகுமாரர்களே! நான் வைக்கப்போகும் போட்டிகள் இவைகள்தான். நான் சொல்லும் வேலைகளை நான் சொல்கிறபடி செய்து முடிக்க வேண்டும். இதில் உங்கள் உடல் பலத்தைக் காட்டிலும் மூளை பலத்தைத்தான் அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

''முதல் வேலை இது தான். இதோ இங் கிருக்கும் இரும்பு உலக்கையை ஒரே கையால், அதுவும் இடது கையால் வளைக்க வேண்டும்.

''இரண்டாவது, உங்கள் முன்னுல் விரித் திருக்கும் இந்தப் பெரிய விரிப்பின் நட்ட நடுவில்

ஒரு எலுமிச்சம்பழத்தை வைக்கப் போகிறேன். விரிப்பின் மேல் சிறிதும் உங்கள் கால்கள் படாது அந்த எலுமிச்சம் பழத்தை எடுக்க வேண்டும்.

''மூன்ருவது 30 அடி உயரமுள்ள ஒரு கம்பத்தை இங்கு இப்பொழுது நடுவார்கள். அதன் உச்சியில் ஒரு சிறு மூட்டை கட்டியிருக்கும். கம்பத்தில் ஏருமல், ஏணியோ, வேறு குச்சிகளேயோ உபயோகிக்காமல் அம்மூட்டையை எடுத்துத் தரவேண்டும்.

''இந்த மூன்று காரியங்களைத்தான் நீங்கள் செய்து முடிக்க வேண்டும். இதற்குப் பிறகு மங்களசுந்தரி கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் அளிக்க வேண்டும்.''

—இவ்வாறு அரசர் போட்டிகளையும் அதற்கான விதிகளையும் சொல்லி விட்டு சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

சிறிது நேரத்திற்குள் முதல் போட்டிக்கான இரும்பு உலக்கை வந்து சேர்ந்தது. அந்த உலக்கையைப் பார்த்ததுமே அதை வளைப்பது யாராலும் இயலாத காரியம் என்பது நன்ருகத் தெரிந்தது. ஒரே கையால், அதுவும் இடது கையால் வளைப்பது முடியவே முடியாத காரியம் என்று அறிந்த பல அரச குமாரர்கள் அந்த உலக்கை பக்கம் கூட செல்லவில்லை. பலதேவன் மட்டும் இறுமாப்புடன் அந்த உலக்கையை கையில் எடுத்தான். அவன் சிறந்த பலசாலி தான். ஆனல் அந்த இரும்பு உலக்கையோ

அசைக்கமுடியாதபடி இருந்தது. பலதேவனுக்கு ஏற்பட்டதெல்லாம் தோல்விதான். திரும்பி வந்து ஆசனத்தில் அமர்ந்தான்.

அந்தக்காரியம் எப்பேர்பட்ட மனிதராலும் செய்யமுடியாது என்பது வீரசிம்மனுக்கு நன்ருகப் புரிந்தது. பிறகு ஏன் அம்மாதிரிப் போட்டி வைத்திருக்கிருர்கள்? இதில் ஏதோ உள் அர்த்தம் இருக்கிறது என்று தோன்றியது அவனுக்கு.

"இந்தச் சின்னக் காரியத்தைச் செய்ய எந்த அரச குமாரனுலும் முடியவில்லையா?" கேலியாகக் கேட்டார் ராஜவர்மர்.

வீரசிம்மன் தன் ஆசனத்தை விட்டு எழுந்தான். இதைக் கண்டதும் மங்களசுந்தரியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. வீரசிம்மன் அரச சபை நடுவே சென்று செங்குத்தாக நிறுத்தி வைத்திருந்த உலக்கையை தனது இடது கையால் சுற்றி வளைத்து அணைத்துக் கொண்டான்.

"அரசே! இப்பொழுது பாருங்கள்! இந்த உலக்கையை, எனது இடது கையால் வளைத்திருக்கிறேன்" என்று வீரசிம்மன் சொன்னதும் எல்லோரும் அவனது புத்தி கூர்மையைப் பாராட்டிப் போற்றிஞர்கள். அரசரும் பாராட்டிஞர். மங்களசுந்தரிதான் மிக மகிழ்ச்சி அடைந்தாள்.

இரண்டாவது போட்டி ஆரம்பமாயிற்று. மிகப் பெரிய ஜமுக்காளத்தின் நடுவே ஒரு சிறிய எலுமிச்சம் பழம் வைக்கப்பட்டிருந்தது. எந்தப்

பக்கத்திலிருந்து பார்த்தாலும் ஜமுக்காளத்தின் நடுப் பகுதிக்கு, ஜமுக்காளத்தின் மேல் கால் படா மல் செல்வது என்பது முடியாத காரியம் என்பது நன்ருகத் தெரிந்தது. பலதேவன் உட்பட எல்லா அரச குமாரர்களும் எழுந்திருக்கவே இல்லை.

வீரசிம்மன் தன் மூளையை தீட்டிக் கொண் டான். ஜமுக்காளத்தின் அருகில் சென்ருன். ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு அந்த ஜமுக் காளத்தை சுருட்டினுன். ஜமுக்காளத்தின் நடுப் பகுதி வந்ததும் பழத்தை எடுத்து அரசனிடம் கொடுத்தான். அனைவரும் வீரசிம்மனின் புத்திக் கூர்மையைப் போற்றினுர்கள்.

மூன்ருவது போட்டி ஆரம்பமாயிற்று. கம்பத் தின் உச்சியில் இருக்கும் முடிச்சை கம்பத்தில் ஏருமல் எப்படி எடுப்பது? வேறு குச்சியோ ஏணியோ உபயோகிக்கவும் முடியாது. இந்தப் போட்டியில் அரச குமாரர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. வீரசிம்மன் கம்பத்தின் அருகே சென்று மேலும் கீழும் பார்த்தான். 'சட்' என்று தன் உடைவாளை எடுத்துக் கம்பத்தை வெட்டி னுன். ஒரே வெட்டில் கம்பம் கீழே சாய்ந்து தரையில் விழுந்தது. ஒரு முனையில் இருந்த மூட்டையை அவிழ்த்து அரசனிடம் கொடுத்தான் வீரசிம்மன்.

வீரசிம்மனின் அளவிடமுடியாத அறிவை எண்ணி எல்லோரும் வியந்து பாராட்டினுர்கள். பலதேவனுக்கு ஒரே பொருமையாக இருந்தது.

போனது போகட்டும். மங்களசுந்தரியின் கேள்வி களுக்காவது ஒழுங்காகப் பதில் சொல்லி



வீரசிம்மனைத் தோற்கடித்துவிட வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.

அரச சபையில் ஒரு பக்கமாக அமர்ந்திருந்த மங்களசுந்தரி தனது போட்டியை ஆரம்பித்தாள்.

“அரச குமாரர்களே! நான் இப்பொழுது மூன்று கேள்விகள் கேட்கப் போகிறேன். அதற்குப் பொருத்தமான விடைகளை நீங்கள்

சொல்ல வேண்டும். ஆனால் விடைகள் சுருக்க மாக இருக்க வேண்டும்'' என இனிமையான தெளிவான குரலில் பேசிப் போட்டியை ஆரம் பித்தாள் அரசகுமாரி.

''அரச குமாரர்களே! முதல் கேள்வி இது தான். உலகத்தில் எந்தக் காலத்திலும், யாராலும் அழிக்க முடியாத மை எது?'' என்று முதல் கேள்வியைக் கேட்டாள் மங்களசுந்தரி.

பல அரசகுமாரர்கள் பல விடைகள் சொன்னார்கள் ஆனால் எந்த விடையும் சரி யில்லை எனக் கூறி விட்டாள் மங்களசுந்தரி. பலதேவன் எழுந்தான்.

''அரசகுமாரி! எங்கள் நாட்டில் நாங்கள் உபயோகிக்கும் மைதான் எக்காலத்திலும், யாராலும் அழிக்க முடியாத மை. நீண்ட காலம் மங்காமல் இருக்கும்'' என்றான் பலதேவன்.

''நீண்ட காலம் இருக்குமே ஒழிய எக் காலமும் இருக்குமா? அதுதான் என் கேள்வி'' என்று மங்கள சுந்தரி சொன்னவுடன் பதில் சொல்ல முடியாமல் உட்கார்ந்தான் பலதேவன்.

வீரசிம்மன் எழுந்தான். ''அரசகுமாரி, எக் காலத்திலும் யாராலும் அழிக்க முடியாத மை ஒன்றுண்டு. அதுதான் உண்மை'' என்று அவன் கூறிய போது, அச்சபையே அவன் கல்வியறிவை மெச்சியது.

மங்களசுந்தரி கேட்ட இரண்டாவது கேள்வி இதுதான்.

''நாம் செய்த எல்லாப் பாவங்களையும் கழுவக்கூடிய நீர் எது?''

பலதேவன் அவசர அவசரமாக எழுந்தான். ''கங்கை நீர்தான் நாம் செய்யும் எல்லா பாவங்களையும் அழிக்கக் கூடியது'' என்று கூறினான். அது தவறு என்று மறுத்து விட்டாள். பலதேவன் வெறுப்போடு உட்கார்ந்தான். பல அரச குமாரர்கள் பல விடைகளைச் சொன்னார்கள். ஆனால் எதுவும் சரியென்று மங்களசுந்தரி ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியாக பாக்கியிருந்தது வீரசிம்மன்தான்.

''அரசகுமாரி! நமது எல்லா பாவங்களையும் கழுவக் கூடிய நீர் நம்முடைய கண்ணீரேதான். நமது பாவங்களையெல்லாம் நினைத்து வருந்தி, விடும் கண்ணீர்தான் நமது பாவங்களையெல்லாம் அழிக்கிறது'' என்றான் வீரசிம்மன்.

அனைவரும் அவன் அறிவுக் கூர்மையைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

மங்களசுந்தரி தனது மூன்றாவது கேள்வியைக் கேட்டாள்.

''உலகிலேயே எல்லையற்ற விலை மதிப்புள்ள பொருள் எது?'' என்று அவள் கேட்டதும் ஆளுக்கொரு பதில் சொன்னார்கள். சிலர் 'வைரம்'

என்றும், சிலர் 'கோமேதகம்' என்றும் சிலர் 'ரத்தினம்' என்றும் கூறினார்கள். ஆனால் இதற்கும் சரியான பதில் அளித்தது நமது வீரசிம்மன்தான்.

''உலகில் விலை மதிப்பற்ற பொருள் அன்பு தான். அதற்கு விலையே கூற முடியாது'' என்று அவன் சொன்னவுடன் மங்களசுந்தரியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவனையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவள் ஆசை கொண்டிருந்தாள் அல்லவா? அது நிறைவேறப் போவதை நினைத்து இப்பொழுது மகிழ்ச்சி அடைந்தாள். சபையிலிருந்த அனைவரும், வீரசிம்மனின் புத்திக் கூர்மையையும், கல்வித் தேர்ச்சியையும், பாராட்டி புகழ்ந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் நடுவில் தனது பொறாமைக் கண்களால் வீர சிம்மனையும், மங்களசுந்தரியையும் பார்த்துக் கொண்டிருந்தான் ஒருவன். அவன் மனதில் ஏமாற்றம் நிறைந்திருந்தது. அவன் தான் பல தேவன்!

7. மங்கள சுந்தரி மறைந்தாள் !

ராஜவர்மன் எழுந்திருந்தார். "அரசகுமாரர்களே ! என் அருமை மக்களே !! இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் மருங்காபுரி இளவரசர் வீரசிம்மன்தான். அவருக்கு நமது பாராட்டுக்கள். அரசகுமாரர்களே! இப்போட்டியில் தோல்வி அடைந்துவிட்டோமென்று வருத்தப் படாதீர்கள். வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்க வேண்டும். எனது மகள் திருமணம் வரை அனைவரும் இங்கேயேயிருந்து செல்ல வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். பிறகு அரச சபை கலைந்தது. பலதேவனுக்கு வீரசிம்மன் மீது பொறுமையாக இருந்தது. "ஊம்! வீரசிம்மா ! மங்கள சுந்தரியை திருமணம் செய்து கொள்ளப் போவது நீயா, நானா? பார்க்கிறேன் ஒருகை" என மனத்திற்குள் உறுமிக் கொண்டான்.

மருங்காபுரி தேசத்திற்குத் தூதுவர்கள் அனுப்பப் பட்டார்கள். மார்த்தாண்ட அரசரும் பத்மாவதி தேவியும் தங்கள் மகன் போட்டியில் வெற்றி பெற்றதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. பலதேவனுக்கு இவர்களை பார்க்கும் போதெல்லாம் ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. "எல்லோருக்கும் சரியான பாடம் கற்பிக்கிறேன்!" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

திருமண நாளும் வந்தது. ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டம். மக்களெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். திருமண நேரமும் நெருங்கியது. வீரசிம்மன் மாப்பிள்ளைக் கோலத்தோடு வந்து அமர்ந்தான். அவனை எந்நேரமும் பிரியாத மதிவாணனும் அருகில் அமர்ந்து கொண்டான். எங்கு பார்த்தாலும் தோரணங்களும் அலங்காரங்களும் நிறைந்திருந்தன. அந்த இடமே கந்தர்வலோகம் போல இருந்தது. கல்யாணப் பெண்ணை அழைத்துவர ராணி உள்ளே போனாள். அங்கே! ...

மணப் பெண்ணைக் காணோம்!... அடுத்த வினாடியே அரண்மனை எங்கும் ஒரே பரபரப்பு. மங்களசுந்தரியின் அறை ஒரேயடியாய் திறந்து கிடந்தது. அங்கு இருந்த தோழிகள் நால்வரும் மயங்கிக் கிடந்தனர். அரண்மனையெங்கும் தேடியும் காணோம். எங்கே மங்களசுந்தரி? அதுதான் ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டனர்.

தோழிகளுக்கு மயக்கம் தீர்ந்தவுடன் ஒருத்தி சொன்னாள், "மங்களசுந்தரிக்கு அலங்காரம்

செய்து கொண்டிருந்தோம்! அப்பொழுது திடீ ரென்று பலதேவனும் நான்கு ஆட்களும் நுழைந் தார்கள்! ஏதோ வாசனை வேரை எங்கள் முகத்துக்கு நேரே காட்டினுர்கள். அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும்.''

ராஜவர்மன் முகம் கோபத்தால் சிவந்தது. மீசை துடித்தது. ''உடனே துறைமுகத்துக்குச் சென்று பாருங்கள். யாரையும் தப்ப விடாதீர்கள்! எந்தக் கப்பலையும் செல்ல விடாதீர்கள்!!'' என ஆணையிட்டார். காவலர்கள் துறைமுகத்தை நோக்கி ஓடினுர்கள். வீரசிம்மனும், மதிவாண னும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு இருவரும் கடற்கரைப் பக்கம் விரைந்து போனுர்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி!!!

கடலில் வெகு தொலைவிற்கப்பால் பல தேவனின் கப்பல் சென்று கொண்டிருப்பது தெரிந்தது!

8. அலைகடல் நடுவே!

பலதேவன் மங்களசுந்தரியைத் தூக்கிக் கொண்டு போவதை அறிந்ததும் அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்தனர். வீரசிம்மனுக்கும் வருத்த மாக இருந்த போதிலும் குருநாதரின் அறிவுரை ஞாபகத்துக்கு வந்தது. ஆகவே அவன் அனை வருக்கும் ஆறுதல் சொன்னான்.

மதிவாணன், ''வீரசிம்மா! பலதேவன் செய்தது அக்கிரமம். அக்கிரமங்களையும் தீய சக் திகளையும் ஒழிக்க வேண்டும் என்று நமது குரு நாதர் சொல்லியிருக்கிறார் அல்லவா? பலதேவனை எப்படியாவது ஒழித்து இளவரசியைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறினான்.


''ஆம்! மதிவாணா! நீ சொல்வது உண்மை தான்! ஆனால் இந்தமாதிரி விஷயங்களிளெல் லாம் ஆலோசனை செய்த பிறகே காரியத்தில் இறங்க வேண்டும்! இருப்பினும் நாம் மிக சீக்கிரம் ஒரு படையுடன் பவழத்தீவு செல்வோம்!'' என்றான் வீரசிம்மன்.

ராஜவர்மன், " ஆம் இளவரசே! நீங்கள் எப்படியாவது மங்களசுந்தரியைக் காப்பாற்ற வேண்டும்! நின்றுபோன உங்கள் திருமணம் சீக்கிரமே நடக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். மார்த்தாண்டனும், பத்மாவதியும் அதையே விரும்பினுர்கள். ஆகவே அடுத்த நாளே ஒரு படையுடன் வீரசிம்மனும் மதிவாணனும் பவழத்தீவு செல்வதாகத் தீர்மானிக்கப் பட்டது.

அடுத்த நாள் சூரியன் உதிக்கும் வேளையில் கப்பல் தயாராக இருந்தது. அதில் இரண்டாயிரம் போர் வீரர்கள் இருந்தார்கள். வீரசிம்மனும், மதிவாணனும் அனைவரிடமும் விடை பெற்றுக் கப்பலில் ஏறிப் பிரயாணத்தைத் தொடங்கினர்.

கப்பல் அலைகடலில் மிதந்து செல்ல ஆரம்பித்தது. பவழத்தீவிற்குச் செல்லப் பத்து நாட்கள் கப்பலில் பிரயாணம் செய்ய வேண்டும். மூன்று நாட்கள் கழிந்தன. நான்காவது நாள் காலை. திடீரென்று வானத்தைக் கருமேகங்கள் மூடிக் கொண்டன. காற்று பலமாக வீச ஆரம்பித்தது. கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. கப்பல் இங்கு மங்கும் ஆடலாயிற்று. சிறிது நேரத்தில் பலத்த காற்றும் பெருமழையும் சேர்ந்து கொண்டன. எங்கும் ஒரே இருட்டு. கப்பல் எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடும் போல இருந்தது. மாலுமிகளால் கப்பலை செலுத்த இயலாமற் போயிற்று. அனைவரும் கடவுளை வேண்டிக் கொள்ள ஆரம்பித்தனர்.

ஆனால் பெருங்காற்று புயலாக மாறியது. கப்பல் எங்கு செல்கிறது என்பதுகூடத் தெரிய



வில்லை. திடீரென்று கப்பல் எங்கோ ஒரு பாறையில் மோதியது. அடுத்த கணமே கடலில் கவிழ்ந்தது. கப்பல் முழுதும் இருந்த வீரர்கள் அனைவரும் 'ஓ' வென்று கதறினார்கள். ஆனால் கடலின் இரைச்சலில் அவர்கள் கதறல் அமுங்கிப் போயிற்று. வீரசிம்மனும், மதிவாணனும் தைரியமாக கடலில் குதித்தார்கள். கப்பலில் உடைந்த ஒரு கட்டை அவர்களிடம் சிக்கியது. இருவரும் அதைப்பிடித்துக் கொண்டனர். கப்பல் மீண்டும் பாறையில் மோதிக் கவிழ்ந்தது. வீரர்கள் அனைவரும் கடலில் மூழ்கினர். நேரம் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாகப் புயல் ஓய்ந்தது. கடல் அலைகள் குறைந்தன மழை நின்றது. மேகங்

கள் விலகின. வீரசிம்மனும், மாதிவாணனும் கட்டையைப் பிடித்தவாறே திரும்பிப் பார்த்தனர். ஆனல்...! கப்பல் இருந்த இடத்தில் ஒன்றுமே இல்லை! அவர்கள் இருவரைத் தவிர ஒருவருமே உயிர் பிழைக்கவில்லை.

இறந்துபோன வீரர்களை நினைத்து இருவரும் வருந்தினார்கள். திடீரென்று மதிவாணன் "வீரசிம்மா! அதோபார்" என்று ஒருபக்கம் கையை நீட்டிக் காண்பித்தான். அந்த இடத்தில் கரையோரமாக சில பாழடைந்த மண்டபங்கள் காணப்பட்டன. "இதுவும் ஆண்டவன் கருணை தான். மதிவாணா, கரைக்குச் சென்று பிறகு ஆக வேண்டியதைக் கவனிக்கலாம்" என்று வீர சிம்மன் கூறினன். கட்டையைப் பிடித்தவாறே இருவரும் கரையை நோக்கி நீந்த ஆரம்பித் தார்கள்.

9 ஆடும் சிலையும் அதிசய தேவதையும்

கரையை அடைந்தபோது அவர்கள் மிகவும் களைத்து விட்டார்கள். அங்கேயே ஒரு மரத்தடியில் சிறிது நேரம் படுத்துக் கிடந்த பிறகுதான் அவர்களுக்குக் கொஞ்சம் பலம் வந்தது. மரங்களிலிருந்த பழங்களைப் பறித்துச் சாப்பிட்டார்கள். பிறகு அந்தத் தீவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

அந்தத் தீவில் மனித நடமாட்டமே இல்லை. தீவின் உள் பக்கம் முழுவதும் ஒரே மணலாகக் காணப்பட்டது. ஒன்றிரண்டு மண்டபங்களையும் சில மரங்களையும் தவிர வேறு ஒன்றுமே காணப்படவில்லை. இருவரும் அந்தத் தீவைச் சுற்றிச் சுற்றிக் களைத்து விட்டனர். கடைசியாக ஒரு பாழடைந்த மண்டபத்தில் போய் உட்கார்ந்து கொண்டனர். அங்கிருந்த வௌவால்கள் சட சடவென்று பறந்து சென்றன. அம் மண்டபத்தைச் சுற்றிச் செடி கொடிகள் புதர்போல் மண்டிக் கிடந்தன.

"வீரசிம்மா!... நமது திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டன. நாம் இப்போது எங்கே

இருக்கிறோம் என்றே தெரியவில்லை... என்றைக்கு நாம் பவழத்தீவு போவது, எப்படி இளவரசியைக் காப்பாற்றுவது?" என்று பேசிக் கொண்டே வந்த மதிவாணன் சட்டென்று பேசுவதை நிறுத்தினான்: அவன் கண்கள் எதையோ ஆச்சரியத்துடன் பார்த்தன. வீரசிம்மன் அதைக் கவனித்து விட்டு தானும் அந்தப் பக்கம் நோக்கினான். அங்கே...

ஒரு சிலை நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தது. அது மட்டுமல்ல; இனிமையான ஒரு பாடல் அந்தச் சிலையினின்றும் கிளம்பியது.

"ஆடி ஆடிக் களைத்தேன்
பாடிப் பாடி இளைத்தேன்
ஓடி ஓடிச் செல்லும் நாள்
தேடித் தேடி வந்திடுமோ?"

அப்பாட்டு இனிமையாக இருந்தது. அதில் துன்பம் நிறைந்திருந்தது.

"மதிவாணா!... சிலை பாடுகிறது! ஆடுகிறது! என்றால் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. வா, அருகில் போய்ப் பார்ப்போம்" என்று வீரசிம்மன் கிளம்பினான்.

"வீரசிம்மா! நில்! அதோ பார்!" என்று மதிவாணன் எதிர்த் திசையைக் காட்டினான். அங்கு தொலைவில் ஒரு உருவம் அந்தச் சிலைக்கு அருகே சென்று பயங்கரமாகச் சிரித்தது. அந்த உருவத்தையே கூர்ந்து கவனித்த வீரசிம்மன் திடுக்கிட்டான்...! அந்த உருவம்...!

சூனியக்காரிதான் அவள்! வீரசிம்மனுக்குத் தனது ஐந்தாவது பிறந்ததின ஞாபகம் வந்தது. அன்று நாடு கடத்தப்பட்ட அவளை இங்கு பார்த்த போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சூனியக்காரி மிகவும் பெரிதாகச் சிரித்தாள். பிறகு சிலையைப் பார்த்து "என்ன சிலையாரே? சௌக்கியமா?" என்று கேலியாகக் கேட்டாள்.



"பத்து வருடங்களாக தினந்தோறும் சொல்லிக் கொண்டிருக்கின்ற பதிலைத்தான்

இன்றைக்கும் சொல்கிறேன். நீ சொல்லும் காரியத்தைச் செய்யமாட்டேன்'' என்று அந்தச் சிலை கூறியது. சூனியக்காரி கோபத்தால் குதித்தாள்.

''ஜம்பு!... நன்றாக யோசித்துப் பார். இத்தனை வருஷங்கள் இந்தச் சிலையில் சிறை பட்டுக் கிடந்தும் உனக்கு புத்தி வரவில்லையே! நான் சொன்ன அந்த ஒரு காரியத்தைமட்டும் செய்து முடித்துவிடு! உனக்கு குபேரச் செல்வம் கிடைக்கும்?... என்ன சொல்கிறாய்?'' என மீண்டும் கேட்டாள் அவள்.

சிலை பேசிற்று.

'' சீ!... நீ ஒரு பாவி! நீ சொல்லும் காரியம் மிகப் பாவமான காரியம்!... நானும் எனது தோழர்களும் நல்ல காரியத்திற்காகவே பிறந்த தேவதைகள்! எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந் திருந்தோம்! எங்கள் ஆனந்தத்தையே கெடுத்து விட்டாயே! நீ சொன்ன காரியத்தைச் செய்ய மாட்டேன் என்றதால் என்னை இந்தச் சிறையில் வைத்து விட்டாய். என் தோழர்களை மரங்களிலும், கற் தூண்களிலும் சிறைப்படுத்திவிட்டாய்?... உன்னோடு பேசுவது கூடப் பாவம்! உன்னை ஆண்டவன் என்றைக்காவது தண்டிக்காமல் போகமாட்டார்.''

சூனியக்காரி பலமாகச் சிரித்தாள். ''என்னை தண்டிக்க எந்த ஆண்டவனாலும் முடியாது...

அது சரி! கடைசி முறையாகக் கேட்கிறேன். மருங்காபுரி இளவரசன் வீரசிம்மனை உடனே நீ என்னிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். முடியுமா, முடியாதா? இதைத்தான் உன்னிடம் பத்தாண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்ன சொல்கிறாய்?" எனச் சிலையைப் பார்த்து உறுமினாள் சூனியக்காரி.

புதர் மறைவிலிருந்த வீரசிம்மனும் மதிவாணனும் இதைக் கேட்டு திடுக்கிட்டார்கள்.

"அதுதான் முடியாதென்று நானும் பத்து வருடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீ அந்த நாட்டுக்குத் திரும்பிப் போனால் உன் திட்டங்கள் எல்லாம் பாழாகிவிடும். அதற்காக என்னை அங்கு போய் இந்த அக்கிரமத்தைச் செய்யச் சொல்கிறாயா? அதுதான் முடியாது. ஒன்றுமறியாத இருபத்தியாறு இளவரசர்களைக் கொன்று பெட்டிகளில் போட்டு வைத்திருக்கிறாயே, இன்னுமா உன் ஆசை தீரவில்லை?" என்றது சிலையிலிருந்த ஜம்பு.

"ஆமாம்! இன்னும் ஒரே இளவரசன்தான் தேவை. உடலில் எந்தவித சிறு ஊனமும் இல்லாத இருபத்தேழு இளவரசர்களைப் பலியிட்டால் எனக்கு மிகப் பெரிய சக்திகளெல்லாம் கிடைக்கும். அப்புறம் இந்த உலகில் என்னை யாருமே ஒன்றும் செய்ய முடியாது. இருபத்தாறு இளவரசர்களைக் கொன்று பெட்டிகளில் போட்டு வைத்திருக்கிறேன். அவர்கள் உயிரை ஒரு

முட்டையில் அடக்கி வைத்திருக்கிறேன். இன்னும் ஒரே ஒருவன்தான். அவன்தான் வீர சிம்மன். அவனைத்தான் முதலில் கொண்டுவர நினைத்தேன். அதற்காகத்தான் இரு முறைகள் அரண்மனைக்குப் போனேன். அவனைத் தூக்கிவர முயற்சித்தேன். முடியவில்லை. அதனால் பரவா யில்லை. அவனைக் கடைசியில் பிடித்துக் கொள் கிறேன்'' என்று கூறி பயங்கரமாகச் சிரித்தாள் அவள்.

''உலகத்திலே நீதான் மிகக் கொடியவள். உனக்குச் சாவே வராதா? உன்னை யாரும் கொல்லவே முடியாதா?'' என்றது ஜம்பு.

''என்னைக் கொல்லவா?... அது யாராலும் முடியாது. என் உயிரை எங்கே மறைத்து வைத்திருக்கிறேன் தெரியுமா? அந்த இருபத் தாறு அரசகுமாரர்கள் உயிரோடு என் உயிரையும் சேர்த்து முட்டைக்குள் வைத்திருக்கிறேன். அந்த முட்டையை வைத்திருக்கும் இடத்திற்கு யாருமே போக முடியாது. போனாலும் எடுக்க முடியாது. ஏன் தெரியுமா? முட்டையைப் பவளத் தீவு பாம்புப் பாறையில் வைத்திருக்கிறேன். அங்கு போவது மிகவும் கடினம். அப்படிப் போனாலும் முட்டைக்குக் காவலிருக்கும் நாகவர்மன் என்னும் பாம்பு சும்மா விடாது....தெரியுமா?'' என்று கூறினாள் சூனியாக்காரி.

''அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும். என்றைக்காவது ஒருவன்

உன்னை அழித்தே தீருவான். ஒருநாள் உனக்கு அழிவு வந்தே தீரும் ... திரும்பவும் கேட்கிறேன்; எனக்கு இந்த நிலையிலிருந்து விடுதலை கொடுத்து விடு. உன் வாழ்நாளில் இந்த ஒரு நல்ல காரியத்தையாவது செய். உனக்குப் புண்ணியமாவது ஆகும்" என்று கெஞ்சியது ஜம்பு.

"அதுதான் முடியாது. நான் சொன்ன காரியத்தைச் செய்தால்தான் உனக்கு விடுதலை. அதுமட்டுமல்ல. என்னைத் தவிர உன்னை யாராலும் விடுவிக்க முடியாது: ஏன் தெரியுமா? உன் விடுதலைக்கான சூரியஜோதி மந்திரம் என்னைத் தவிர மருங்காபுரி ராஜகுரு பரமானந்தருக்கு மட்டும்தான் தெரியும். அவர் எங்கே இங்கே வரப் போகிறார்? உனக்கு விடுதலை அளிக்க என்னால் தான் முடியும். அதனால் நான் சொன்னபடி செய்" என்றாள் அந்த ஈவிரக்கமற்ற சூனியக்காரி.

"நான் சிறைப்பட்டுக் கிடந்தாலும் பரவாயில்லை. நீ சொல்லும் அக்கிரமத்துக்குப் பணிய மாட்டேன். அந்த அக்கிரமத்தைச் செய்யவும் மாட்டேன்!" என்று உறுதியாக ஜம்பு கூறியது. சூனியக்காரி கோபத்தில் குதித்தாள்.

"இனி நான் உன்னைக் கேட்கவே மாட்டேன். உன் வாழ்நாள் முழுவதும் இந்தச் சிலையில் கிடந்து கஷ்டப்படு" என்று கூறி விரைவாகப் போய்விட்டாள் சூனியக்காரி.

அவள் மறைந்தவுடன் வீரசிம்மனும் மதிவாணனும் மறைவிலிருந்து வந்தார்கள். சிலையின்

பக்கம் போனார்கள். அந்த சிலையிலிருந்த ஜம்பு தனது விதியை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது.

தன்னருகில் வந்து நின்ற இருவரைக் கண்டதும் ஜம்பு திகைத்து "யார் நீங்கள், இந்தத் தீவில் நீலியைத் தவிர யாரும் கிடையாதே!" என்று கேட்டது.

"கவலைப்படாதே! நீயும் நீலியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். உனக்கு எப்படியும் உதவுகிறேன். நான் தான் நீலி சொல்லிக்கொண்டிருந்த மருங்காபுரி இளவரசன் வீரசிம்மன். இவன் என் உயிர் நண்பன் மதி வாணன். உனது உறுதியைப் பாராட்டுகிறேன். நல்லவர்களுக்கு உதவவேண்டும் என்பதற்கே எங்கள் ராஜகுரு பரமானந்தர் பல மந்திரங்களை எனக்குக் கற்பித்திருக்கிறார். அதில் சூரியஜோதி மந்திரமும் ஒன்று. அது இப்போது நல்ல உயிரொன்றைக் காப்பாற்ற உதவுகிறது" என்று சொல்லி அருகே அமர்ந்தான் வீரசிம்மன். கண்களை மூடிக்கொண்டு சூரியஜோதி மந்திரத்தை ஜபிக்கலானான்.

மந்திரம் சொல்லி முடிந்தவுடன் இரண்டடி உயரமேயான ஒரு தேவதை வெளி வந்தது. அதற்கு ஒரே ஆனந்தம். விடுதலையான சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. நடனம் ஆடியது. வீரசிம்மனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

" நீலி பயம் போச்சு இனி
நீயே எனக்கு எஜமானன்
என்ன சொன்னாலும் கேட்பேன்
என் உயிர் வேண்டுமானாலும் தருவேன் "

—என்று பாடி ஆடியது.

வீரசிம்மனும் மதிவாணனும் ஜம்புவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

ஜம்பு சொல்லிற்று :

நான் இந்தத் தீவில் வசித்துவந்த ஒரு தேவதை. என் நண்பர்களும் நானும் பசுமையான இந்தத் தீவில் ஆனந்தமாக வசித்து வந்தோம். அப்பொழுதுதான் பதினைந்து வருடங்களுக்கு முன் ஒருநாள் இந்த சூனியக்காரி நீலி இந்தத் தீவில் வந்து இறங்கினாள். ஒரு குகையில் அமர்ந்துகொண்டு கெட்ட தேவதைகளையெல்லாம் வசப்படுத்தி இந்தத் தீவையே பாழாக்கி விட்டாள். அந்தத் தேவதைகளை பல நாடுகளுக்கு அனுப்பி இருபத்தாறு அரசகுமாரர்களைப் பிடித்து வந்தாள். அவர்கள் உயிர் வேறு உடல் வேருகப் பிரித்து வைத்திருக்கிருள். உங்களுக்கு மந்திரங்கள் தெரிந்திருந்ததால்தான் அந்தத் தேவதைகள் உங்களை நெருங்க முடியவில்லை. அதனுல் தான் என்னைக் கட்டாயப் படுத்தினுள். அந்த அரசகுமாரர்களது உயிர்களையெல்லாம் எங்கே வைத்திருக்கிருளென்று இப்போது சொன்னுளல்லவா? அந்த முட்டையை உடைத்து உள்ளிருக்கும் ரசத்தை அவர்கள் மேல் தெளித்தால் எல்லோரும் பிழைத்துக்கொள்வார்கள்."

“மதிவாணு! நீலியின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். அந்த முட்டையை எப்படியாவது கொண்டுவந்து அந்த அரசகுமாரர் களைப் பிழைக்க வைக்கவேண்டும்” என்ருன் வீரசிம்மன்.

“...ஆனுல் வீரசிம்மா! நாம் செல்லும் காரியத்தை மறந்து இதில் ஈடுபட்டால்”... என இழுத்தான் மதிவாணன்.

“அக்கிரமங்கள் எங்கு நடந்தாலும் அவற்றை ஒழிக்க வேண்டும் என்று நமது குரு நாதர் கூறவில்லையா? அதோடு அந்த முட்டை யும் பவழத்தீவில்தான் இருக்கிறது. நாமும் அங்கு தானே போகிருேம்” என்று வீரசிம்மன் கூறினுன்.

பிறகு ஜம்புவைப் பார்த்து “ஜம்பு! நாங்கள் இங்கிருந்து பவழத்தீவிற்குப் போகவேண்டும். அதற்கு ஏதாவது கப்பல்கள் கிடைக்குமா? என்று கேட்டான் வீரசிம்மன்.

ஜம்பு தனது உடலை வளைத்து வணக்கம் செலுத்தியது. “இளவரசே நான் உங்கள் கூடவே வருவதற்கு நீங்கள் அனுமதிக்கவேண் டும். எனக்குப் பல அதிசயமான சக்திகள் உண்டு. என்னுல் உங்களுக்குப் பலவித சௌகரியங்கள் உண்டாகும். எனக்கு விடுதலை கொடுத்தவர் நீங்கள். ஆகவே நான் உங்களுக்கு பிரதியுபகாரம் செய்ய வேண்டும். உங்களுக்கு சேவை செய்யும்

உரிமையை எனக்குக் கொடுங்கள்'' என்று கூறியது ஜம்பு.

பிறகு மூவருமாகக் கிளம்பி அருகில் உள்ள ஒரு தோட்டத்திற்குப் போனார்கள். அங்குள்ள மரங்களிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டேயிருந்தது.

"இளவரசே! இந்த மரங்களில் தான் என் தோழர்கள் நூறு பேர்களையும் சிறைப்படுத்தியிருக்கிறாள் நீலி. தயவுசெய்து இவர்களையும் விடுவியுங்கள்'' என்று கேட்டுக்கொண்டது ஜம்பு.

சூரியஜோதி மந்திரத்தின் மூலம் எல்லா தேவதைகளையும் விடுவித்தான் வீரசிம்மன். எல்லா தேவதைகளும் வீரசிம்மனைச் சுற்றி வந்து ஆனந்தமாக ஆடிப்பாடின.

ஜம்பு எல்லா தேவதைகளையும் பார்த்து "தோழர்களே! நமக்கு இனி நல்ல காலம்! நமது தலைவரும் நானும் பவழத் தீவுக்குப் போகிறோம். அதற்கு உடனடியாக ஒரு நல்ல கப்பல் தேவை. உங்கள் அதிசய சக்தியெல்லாம் திரட்டி மிகச் சிறந்த கப்பல் ஒன்றை இன்றே செய்து முடிக்கவேண்டும். நாங்கள் சென்று சீக்கிரமே திரும்புகிறோம். திரும்பியவுடன் நீலியின் அக்கிரமங்களை அடியோடு ஒழிப்போம்'' என்றது.

எல்லா தேவதைகளும் "இப்போதே முடிப்போம்'' என்று கடலை நோக்கி ஓடின.

10. பவளத் தீவுப் பயணம்

இரவு கழிந்தது. சூரியன் தன் பொற் கிரணங் களுடன் கிழக்கில் உதித்தான். வீரசிம்மன், மதி வாணனுடனும் ஜம்புவுடனும் கடற்கரைக்குப் போனான். அங்கு அவனுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. ஆம்! அங்கு அழகான ஒரு கப்பல் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. ஒரே இரவில் அந்த தேவதைகள் அந்த உறுதியான கப்பலைக் கட்டியிருந்தன. வீரசிம்மன் அந்த தேவதைகளைப் பாராட்டினான்.

அன்றே அவர்கள் பவழத்தீவுக்கு பயண மாகத் தீர்மானித்தார்கள். ஜம்பு தன் தோழர் களைக் கூப்பிட்டு "யாரும் நீலியிருக்கும் பக்கம் போகக்கூடாது. நாங்கள் இன்னும் ஒரு மாதத்தில் திரும்பிவிடுகிறோம்" என்று கூறி விடைபெற்றது.

கப்பலில் எல்லாவித வசதிகளும் இருந்தன. ஆகவே அவர்களுக்கு எந்தவித சிரமமும் இல்லை. ஒரு வார காலம் பிரயாணம் செய்த பிறகு பவழத்தீவு அவர்களுக்குத் தென்பட்டது. எங்கு பார்த்தாலும் உயர்ந்த மரங்களும் பச்சைபசே

லென்ற வயல்களும் கப்பலிலிருந்து பார்க்கும் போதே அத்தீவு ஒரு செழிப்பான தீவு என்பது தெரிந்தது.

"ஜம்பு! பவழத்தீவை இன்னும் சில நாழி களில் அடைந்துவிடுவோம். பிறகு நாம் செய்ய வேண்டிய காரியங்களை இப்பொழுதே தீர்மா னித்துக் கொள்ளவேண்டும்!!" என்று கூறிய படியே ஜம்புவைப் பார்க்கத்திரும்பியவன் திடுக் கிட்டான். ஏனென்ருல் ஜம்பு இருந்த இடம் காலியாக இருந்தது". எங்கே போயிற்று ஜம்பு? ... "மதிவாணு!" என்று வீரசிம்மன் அழைத்த வுடன் ஓடிவந்தான் அவன்.

"மதிவாணு? ஜம்புவை எங்காவது பார்த் தாயா? இங்கேதான் நின்றுகொண்டிருந்தது" என்று ஒரு மூலையைக் காட்டினுன். அந்த இடத்தில்...

ஒரு நாய் நின்றுகொண்டிருந்தது!

"வீரசிம்மா!... ஏது இந்த நாய்? புதிதாக இருக்கிறது... நமது கப்பலில் நாய்களே கிடையாதே?" என்று கேட்டான் மதிவாணன்.

"ஆமாம் மதிவாணு! ஜம்புவைக் காணும்! ஆனல் அந்த இடத்தில் ஒரு நாய் இருக்கிறதே, ... அப்படியானல்"... என்று ஆரம்பித்தான் வீரசிம்மன்.

"... ஜம்புதான் இந்த நாய். இந்த நாய்தான் ஜம்பு" என்று சொல்லி முடித்தது அந்த நாய்.

“ அட ஜம்புவா! இதென்ன வேஷம்?... உருவத்தை மாற்றிக் கொண்டுவிட்டாயே!” என்று ஆச்சரியப்பட்டார்கள் வீரசிம்மனும் மதிவாணனும்.

“ ஆமாம்! நன்றியின் உருவம் நாய்!... எனக்கு எந்த உருவத்தையும் எடுக்கும் சக்தி உண்டு. இந்த உருவத்துடனே இருந்தால் உங்களுக்கு பலவிதங்களில் சௌகரியமாக இருக்கும். சரி மேலே ஆகவேண்டிய காரியங் களைக் கவனிப்போம்” என்றது நாய் உருவத் திலிருந்த ஜம்பு.

“ஜம்பு! நாங்கள் இந்த உருவத்திலே பவழத்தீவில் உலவுவது ஆபத்து! ஏனென்ருல் பலதேவனுக்கும் அவன் ஆட்களுக்கும் எங்களை நன்ருகத் தெரியும். மங்களசுந்தரியைக் கொண்டு போகத்தான் வந்திருக்கிருர்கள் என்று சிறைப் படுத்திவிடுவார்கள். ஆகவே என்ன செய்ய லாம்?” என்று கேட்டான் வீரசிம்மன்.

மூவரும் ஆலோசனை செய்தார்கள். ஜம்பு கூறியது “ இளவரசே! நீங்கள் இருவரும் மாறு வேடம் அணிந்து கொள்வதுதான் நல்லது. மந்திரவாதிகள் போல மாறுவேடம் அணிவது நல்லது. ஏனென்ருல் பலதேவனுக்கு பக்தியும் பயமும் அதிகம். இந்தவேடத்தில்தான் நாம் காரியங்களைச் சாதிக்க முடியும்” என்றது.

ஜம்பு கூறிய யோசனையை மற்ற இருவரும் ஏற்றுக்கொண்டனர். அப்படியே இருவரும் மாறு வேடம் தரித்துக்கொண்டனர். இப்பொழுது வீரசிம்மனும், மதிவாணனும் நின்ற இடத்தில், நீண்ட தாடியும், மந்திரக்கோலும் கொண்ட இரு மந்திரவாதிகள் நின்றனர். அவர்களின் உண்மை உருவத்தை சிறிதும் கண்டுகொள்ள முடியவில்லை.

கப்பல் கரையை அடைந்தது. அங்கு பல நாட்டுக் கப்பல்கள் வியாபாரத்துக்காக வந்திருந் தன. துறைமுக அதிகாரியிடம் சென்று தங்கள் கப்பலை ஓர'டத்தில் பத்திரமாக நிறுத்திவைக்குபடி கேட்டுக்கொண்டார்கள். பிறகு நகரத்துக்குள் நுழைந்தார்கள். மந்திரவாதிகள் உருவத்தில் போகும் வீரசிம்மனையும், மதிவாணனையும் கண்டு தெருவில் போகும் எல்லா மக்களும் வணக்கம் செலுத்தினார்கள். இப்படி சிலத் தெருக்களை கடந்ததும் ஒரு சத்திரத்திற்கு வந்துசேர்ந்தார் கள். அந்த சத்திர அதிகாரி இருவரையும் உபசரித்து வரவேற்றார். அவர்களுக்கு தனியிடம் அளித்தார். மந்திரவாதிகளாக இருந்தால் எல்லா மரியாதைகளையும் அளிக்க வேண்டுமென்பது பலதேவனது உத்தரவு. அதனால்தான் வீர சிம்மனுக்கும் மதிவாணனுக்கும் இவ்வளவு உபசாரங்கள் நடந்தது.

உணவருந்தி முடிந்தவுடன் மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி, மூவரும் யோசனை செய்தார்கள். ஜம்பு கூறியது.

“இளவரசே!...நாம் முதலில் செய்ய வேண்டிய காரியம் பாம்புப் பாறைக்குச் சென்று அந்த உயிர் முட்டையை எடுத்துவரச் செய்வது தான். பிறகு நாம் இளவரசியாரைக் காப்பாற்ற ஏற்பாடுகள் செய்வோம். ஏனென்ருல் இள வரசியை நாம் அடைந்த பிறகு ஒரு விநாடிகூட இந்தத் தீவில் இருக்கக்கூடாது. ஆகவே முதலில் பாம்புப் பாறைக்குச் சென்று முட்டையைக் கைப்பற்றுவோம்.”

எல்லோரும் அடுத்தநாள் பாம்புப் பாறைக் குப் போவதென்று தீர்மானித்தார்கள்.

11. பாம்புப் பாறை

அடுத்த நாள் காலையில் வீரசிம்மனும் மதிவாணனும் எழுந்து பார்க்கும்போது நாயைக் காணவில்லை. ஆனால் அந்த இடத்தில் ஒரு கிளி இருந்தது அந்தக் கிளி பறந்துவந்து வீரசிம்மன் தோளில் அமர்ந்துகொண்டது அந்தக் கிளிதான் ஜம்பு என்று வீரசிம்மன் புரிந்துகொண்டான்.

"பிரயாணத்திற்கு ஏற்ற உருவம் இதுதான். அதுதான் இப்படி மாறிவிட்டேன்" என்று கூறிய ஜம்பு "ஊம்! கிளம்புங்கள்!" என்றது.

வீரசிம்மனும், மதிவாணனும் இரு குதிரைகளை வாடகைக்கு வாங்கிக்கொண்டார்கள். பாம்புப் பாறைக்குப் பயணமானார்கள். மூன்று நாட்கள் பிரயாணம் செய்த பிறகு கடைசியாக பாம்புப் பாறை பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். பாம்புப் பாறைக்குச் செல்லவேண்டுமென்ற போது அங்கு இருந்தவர்கள் "அங்கு போவது மிக ஆபத்து! அங்கு போனவர்கள் திரும்பி வந்ததே இல்லை!" என்று எச்சரித்தார்கள்.

ஆனால் வீரசிம்மன் பயப்படவில்லை. காலையில் மூவருமாகக் கிளம்பி பாம்புப் பாறைக்குப் போனார்கள். வழியில் அவர்கள் கண்டகாட்சிகள் பயங்கரமானவைகளாக இருந்தன. ஆயிரக்கணக்கான பாம்புகள் வழியெல்லாம் நெளிந்து கொண்டேயிருந்தன. தமது குருநாதர் சொல்லிக் கொடுத்திருந்த நாகவசிய மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே போனார்கள் வீரசிம்மனும் மதிவாணனும். அம்மந்திரத்தைக் கேட்டவுடன் எல்லாப் பாம்புகளும் விலகி ஓடின.

கடைசியில் மூவரும் ஒரு பெரிய பாறைக் கருகில் வந்து சேர்ந்தார்கள். இவ்வளவு தூரம் குதிரையில் வந்த களைப்புத் தீர ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்கள். திடீரென்று ஒரு இனிமையான பாடல் காற்றில் மிதந்து வந்தது.

திடுக்கிட்ட மூவரும் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினார்கள். அங்கே பாறைக் கப்பால்...!

ஒரு அழகான பெண் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தாள்! ஆனால் அவள் பாறைக் கப்பால் இருந்தாள். அவள் பாட்டில் சோகம் பொங்கிக் கொண்டிருந்தது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

வீரசிம்மனும், மதிவாணனும் அவளிருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் தன் பாட்டைச் சட்டென்று நிறுத்திவிட்டு அப்

பெண் திடுக்கிட்டு எழுந்து நின்ருள். அவள் கண் களில் பயமும், ஆச்சரியமும் கலந்து ஒளி வீசின.

''யார் நீங்கள்? எங்கே வந்தீர்கள்?..... ஐயோ! இது ஆபத்தான இடம்! ஓடிவிடுங்கள்! நாகவர்மன் பார்த்தால் உங்களைக் கொன்று விடு வான்'' என்று கூறியபடியே மிரள மிரள விழித் தாள் அப்பெண்.

''பெண்ணே! பயப்படாதே! நாங்கள் உனக்கு நண்பர்கள்தான். எங்களால் முடிந்த உதவியைச் செய்வதற்குக் காத்திருக்கிருேம். எங்களை நம்பு யார் நீ .....? யார் அந்த நாகவர்மன்! சொல்!'' என்ருன் மதிவாணன். அவனுக்கு அப்பெண்ணைக் கண்டதும் அவள் மீது பரிவும், பாசமும் ஏற்பட்டது. அவளது அழகைக் கண்டதும் அவன்மீது அன்பும் ஏற்பட்டுவிட்டது.

அப்பெண் மதிவாணனையே சிறிது நேரம் பார்த்தாள். அவனது அழகு ததும்பும் முகமும், வீரம் ததும்பும் மொழிகளும் அவளுக்குப் பிடித் திருந்தன அவன்மீது எல்லையற்ற ஆசை பிறந் தது ஆனுல் அவள் மீண்டும் அங்குமிங்கும் பார்த்தவாறு ''ஐயோ! இங்கே இருக்காதீர்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் நாகவர்மன் வந்து விடுவான். அவனிடமிருந்து தப்பிக்கவே முடி யாது'' என அவர்களை எச்சரித்தாள்.

அப்பொழுது கிளி வடிவிலிருந்த ஜம்பு அவள் தோள்களில் வந்து அமர்ந்தது. ''பெண்ணே!

வந்திருப்பவர்கள் சிறந்த வீரர்கள். மந்திரசக்தி வாய்ந்தவர்கள். எப்படியும் உன்னைக் காப்பாற்று வார்கள். அதனால் தைரியமாகப் பேசு!'' எனக் கூறியது.

கிளி பேசுவதைக் கேட்டவுடன் அப்பெண் மிகவும் ஆச்சரியமடைந்தாள்.

''கிளி பேசுகிறதே என்று ஆச்சரியப் படு கிருயா?'' என்று சொல்லி ஜம்பு ஒளிமயமான தனது தேவதை உருவைக் காண்பித்தது.

''பார்த்தாயா? இதுதான் எனது சுயஉருவம்! நான் இவர்களது அடிமை. இவர்களுக்கு மகத் தான சக்திகள் உண்டு. உனக்கு எப்படியும் உதவி செய்வார்கள். ஆகவே தைரியமாகச் சொல்'' என்றது ஜம்பு. மீண்டும் கிளி உருவை அடைந்தது.

அந்தப் பெண்ணுக்கு இப்போது அவர்கள் சக்தியில் நம்பிக்கை பிறந்தது.

அவள் சொன்னாள்:

''என் பெயர் பிரபாவதி. நான் பச்சைத்தீவு அரசன் பானுவர்மனின் புதல்வி. எனக்கு இன்னும் நன்ருக நினைவு இருக்கிறது. பத்து வருடங்களுக்குமுன் நீலி என்ற சூனியக்காரி எங்கள் நாட்டிற்கு வந்தாள். அப்போது எனக்கு ஐந்தாறு வயதிருக்கும். என் அப்பாவைப் பார்த்து, தான் பாலைத் தீவில் இருப்பதாகவும், அங்கு சௌகரியப்படாததால், பச்சைத் தீவில்

இடம் தரும்படியும் சொன்ஞள். ஆஞல் அவள் மருங்காபுரியிலிருந்து நாடு கடத்தப்பட்டவள் என அறிந்த என் தந்தை அவளுக்கு இடம் கொடுக்க மறுத்தார். அதஞல் அவள் ஆத்திரமடைந்தாள். கோபத்தால் குதித்தாள். சிறுமியாக இருந்த நான் அவளைப் பார்த்துச் சிரித்தேன். என் தந்தையும் சிரிப்பில் கலந்துகொண்டார். இந்த சூனியக்காரி மேலும் ஆத்திரமடைந்தாள். பிறகு என் தந்தை யைப் பார்த்து "எனக்கு இடம் கொடுக்க மறுத்து விட்டாய். என்னைக்கேலியும் செய்கிருய். உன்னைப் 'பழிக்குப்பழி' வாங்குகிறேன் பார்" என்று கோபத்தோடு கத்திவிட்டுப் போய்விட்டாள்.

"அன்று இரவு நான் தூங்கிக்கொண்டிக்கும் போது அந்த சூனியக்காரி உள்ளே வந்தாள். மந்திரக்கோலை ஆட்டி என்னை மயக்கினதுதான் எனக்கு தெரியும். பிறகு இந்தப் பாம்புப் பாறைக்கு வந்துதான் என் மயக்கம் தெளிந்தது. என்னை இந்தப் பாம்புப் பாறைத் தலைவன் நாகவர்மனிடம் ஒப்படைத்து ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டு அந்த சூனியக்காரி போய்விட் டாள். அதிலிருந்து பத்தாண்டு காலமாக இங் கேயே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் அப்பாவும் அம்மாவும் என்னைக் காணுமல் எவ் வளவு வேதனைப்படுவார்கள்!...... பாவி! சூனியக் காரி!"

"பிரபாவதி! பயப்படாதே! அந்த சூனியக் காரியின் அக்கிரமங்களுக்குச் சாவுமணி அடிக்கத் தான் நாங்கள் கிளம்பியிருக்கிறேம். அவள் எந்த

மருங்காபுரி தேசத்திலிருந்து நாடு கடத்தப் பட்டாளோ, அந்த தேச இளவரசர் வீரசிம்மன் இவர்தான். நான் அந்த தேச மந்திரிகுமாரன் மதிவாணன். எப்படியும் நாகவர்மனிடமிருந்து உன்னைக் காப்பாற்றுகிறோம்'' என்று மதிவாணன் சொல்லிக்கொண்டிருந்தபோது...

ஒரு பயங்கரமான உறுமல் சப்தம் வந்தது. அனைவரும் சப்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தனர். அங்கு கோரமான உருவத்துடனும்,



கோபம் கக்கும் விழிகளுடனும் நாகவர்மன் வந்து கொண்டிருந்தான்!

12 நாகவர்மன் நல்லவன் ஆனான்

நாகவர்மனைக் கண்டதும் பிரபாவதி நடுங்கிப் போனாள். கிளிவடிவிலிருந்த ஜம்பு அவள் தோளில் அமர்ந்துகொண்டு ஆறுதலாகத் தன் சிறகுகளை அவள் மீது வருடியது.

கொடிய பயங்கர உருவத்துடன் வந்து நின்ற நாகவர்மனை ஏற இறங்கப் பார்த்தார்கள் வீர சிம்மனும் மதிவாணனும்.

"என் பாம்புப் பாறையில் மனிதர்களா! ஆச்சரியம்! யார் நீங்கள்? உண்மையைச் சொல்லிவிடுங்கள்! சாவதற்கு முன்பு உண்மையைச் சொல்லிவிடுங்கள்!..." என்று பயங்கரமான குரலில் கத்தினான் நாகவர்மன்.

"என் பெயர் வீரசிம்மன். நான் மருங்காபுரி நாட்டு இளவரசன். இவன் எனது உயிர் நண்பன் மதிவாணன். மரியாதையாகக் கேட்கிறோம். ஏன் இந்தப் பெண்ணை இப்படி துன்பப்படுத்துகிறாய்! உனக்கும் சூனியக்காரி நீலிக்கும் என்ன சம்பந்தம்!...இந்தப் பெண்ணை விட்டுவிடு" என்று நல்லவிதமாகக் கேட்டான் வீரசிம்மன்.

''...ஹாஹா! என்னை மிரட்டப் பார்க்கிருயா? சிறு பயல்கள்! நினைத்தால் ஒரே விநாடியில் சாம்பலாக்கி விடுவேன். என்னவென்று நினைத் தீர்கள்?...'' என்று உறுமிஞன் நாகவர்மன். பிறகு ''ஆமாம்...எப்படி என் நாட்டிற்குள் வந்தீர் கள்? ஆயிரக்கணக்கான பாம்புகளைத் தாண்டி எப்படி வந்தீர்கள்? எப்படி அவைகளிடமிருந்து தப்பினீர்கள்?'' என்ருன்.

''எப்படியோ தப்பிஞேம்? அதுபற்றி உனக் கென்ன? நான் சொல்வதையெல்லாம் கவன மாகக் கேட்டுக்கொள். இதோ நிற்கிருளே பச்சைத் தீவு இளவரசி பிரபாவதி... இவளை விடுதலை செய். உன்னிடத்தில் சூனியக்காரி நீலி கொடுத்துவைத்திருக்கிருளல்லவா, அந்த முட்டையைக் கொடுத்துவிடவேண்டும். இல்லா விட்டால்...'' என ஆரம்பித்தான் வீரசிம்மன்.

''ஹோ ஹோ'' என்று பயங்கரமாகச் சிரித் தான் நாகவர்மன். ''இல்லாவிட்டால், என்ன செய்வாய். பொடிப் பயல்களே....பயமுறுத்து கிறீர்களா? ...ஒரே மூச்சில் உங்களை எரித்து விடுவேன் தெரியுமா..''? எனக் கர்ஜித்தான்.

''வீணுக அழிந்துபோகாதே! நான் கேட்ட வற்றை நீயாகக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் நாங்களாகவே எடுத்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும்!'' என்ருன் வீரசிம்மன்.

''போனல்போகிறது, சிறுவர்களாக இருக் கிறீர்களே என்று பார்த்தால் மேலே பேசிக்

கொண்டே போகிறீர்களே, பாருங்கள் உங்களை என்ன செய்கிறேன்'' என்று கூறி, சிறிது பின்னால் நகர்ந்தான் நாகவர்மன். இப்போது அவன் நின்ற இடத்தில் மிகப் பெரிய பாம்பொன்று படமெடுத்து நின்றது. அது சீறும்போது நெருப்புப் பொறிகள் பறந்தன.

வீரசிம்மனுக்கு சடாரென்று மங்களபுரியில் நாகம் தந்த மாணிக்கக் கல்லின் ஞாபகம் வந்தது. அதை அப்போது ஒரு மோதிரமாக விரலில் அணிந்துகொண்டிருந்தான். நாக வசிய மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே தீயைக் கக்கும் அந்தப் பாம்பின் முன் மோதிரத்தை நீட்டினான். சீறிப் பாய்ந்த அந்தப் பாம்பு அம்மாணிக்கத்தைக் கண்டதும் அடங்கியது. மந்திரத்தை கேட்டவுடன் சோர்ந்து படுத்துக்கொண்டது.

அடுத்த விநாடி அங்கு நாகவர்மன் கூப்பிய கரங்களுடன் எழுந்து நின்றான்.

''ஐயா! இந்த மாணிக்கம் என் அண்ணன் நாகேந்திரனுடையதல்லவா? இதற்கு எங்கள் கூட்டமே அடிமை. உங்களுக்கு நாகவசிய மந்திரம் வேறு தெரிந்திருக்கிறது. உங்களை எதிர்த்துப் பேசினதற்கு மன்னியுங்கள். நான் தற்போது உங்கள் அடிமை'' என்று சொல்லி வணங்கினான்.

''நாகவர்மா! ஒருவருக்கொருவர் அடிமை இல்லை. நீ சில நல்ல காரியங்கள் செய்ய

வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். பிரபாவதியை நீ வைத்திருப்பது பாவமான செயல். அதனால் அவளை விட்டுவிடு. அதோடு நீலி கொடுத்திருக்கும் முட்டையையும் கொடுத்துவிடு. இதை நான் கட்டளையிடவில்லை. ஒரு உதவி யாகச் செய்!'' என்றான் வீரசிம்மன்.

''இளவரசே! தயவுசெய்து இந்த இரு காரி யங்களைத் தவிர வேறு எதைச் சொன்னாலும் செய் கிறேன். சூனியக்காரி நீலி மிகப்பொல்லா தவள். அவள் இஷ்டப்பட்டால் எதுவும் செய்து விடுவாள். மந்திரங்களில் அவ்வளவு கெட்டிக் காரி அவள். பிரபாவதியை அவள் உத்தரவு இல் லாமல் அனுப்பக் கூடாது என்றும், முட்டையை தான் வந்து கேட்டாலொழிய யாரிடமும் கொடுக்கக் கூடாதென்றும் சொல்லியிருக்கிறாள். முட் டையை என் உயிர்போல காக்கவேண்டும் என்றும் சொல்லியுள்ளாள். நீலிக்கு கோபம் வந் தால் எங்கள் இனத்தையே அழித்துவிடுவாள். ஆகவே தயவுசெய்து இவைகளைத் தவிர வேறு எந்த உதவியையும் கேளுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான் நாகவர்மன்.

''நாகவர்மா! நீலியைப்பற்றி இனி பயப்பட வேண்டாம். அவளைக் கூடிய சீக்கிரம் அழிக்க ஏற்பாடு செய்துவிட்டோம். அவள் உயிரே உன் னிடம்தான் இருக்கிறது. ஏன் விழிக்கிறாய்? உன் னிடம் இருக்கும் அந்த முட்டையில்தான் அந்த சூனியக்காரியின் உயிர் இருக்கிறது. இதைச்

சொன்னல் நீ அடித்து அவள் உயிரைப் போக்கி விடுவாய் என்றுதான் உன்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கிருள். ஆகவே, அவளைப்பற்றி சிறிதும் பயப்படாதே! அவள் அக்கிரமங்களெல்லாம் இன்னும் சில காலத்திற்குதான்'' என்ருன் வீரசிம்மன்.

இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான் நாகவர்மன்.

''அவள் என்னையும், என் கூட்டத்தார்களையும் எவ்வளவு துன்பப் படுத்தியிருக்கிருள் தெரியுமா? அதற்குப் பழிக்குப் பழி வாங்கிக் கொள்கிறேன். அந்த முட்டையை உங்கள் முன்பே போட்டு உடைத்துவிடுகிறேன். அந்தப் பாவியின் உயிர் போய்த்தொலையட்டும். இந்த உலகத்திற்கே அதனுல் பெரிய நன்மை''என்று குகைக்குள் ஓடினன். ஒரு பெரிய முட்டையைத் தூக்கி வந்தான்.

''பாவி! நீலி! சூனியக்காரி! இப்போதே தொலைந்து போ!'' என்று கையை ஓங்கினன் நாகவர்மன். அந்தக் கையைப் பிடித்து முட்டையைத் தன் கையில் வாங்கிக் கொண்டான் வீரசிம்மன்.

''நாகவர்மா! இதை இப்போது உடைத்தால் அந்த சூனியக்காரியோடு ஒரு பாவமும் அறியாத இருபத்தாறு அரசகுமாரர்களும் மாண்டுபோவார்கள்!'' என்று சொல்லி அம்முட்டையை தன் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான் வீரசிம்மன்.

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே' என்ருன் நாகவர்மன்.

"இந்த முட்டைக்குள் நீலி தன் உயிரோடு இன்னும் இறுபத்தியாறு தேச இளவரசர்களின் உயிர்களையும் ரசமாக ஆக்கி அடைத்து வைத்திருக்கிருள். அவர்கள் உடலைப் பாலைத்தீவில் தன் குகையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிருள். என்னையும் கொலை செய்து அதோடு சேர்த்தால் இருபத்தேழாகிறது. இருபத்தியேழு உயிர்களையும், உடல்களையும் பலியிட்டால் யாராலும் அழிக்கமுடியாத சக்தி வாய்ந்தவளாக மாறிவிடுவாள். அதற்காகத்தான் அவள் காத்திருக்கிருள். இந்த முட்டையை உடைத்து இதில் உள்ள ரசத்தால் இறந்த அரசகுமாரர்களை உயிர்ப்பித்து விடலாம். ஆகவே இதை இப்போது உடைக்கக் கூடாது. காலம் வரும்போது அந்த சூனியக்காரி முன்பே உடைத்து, அவளை ஒழித்து இறந்த அரசகுமாரர்களுக்கு உயிர் கொடுக்கவேண்டும்" என்று விளக்கிஞன் வீரசிம்மன்.

"அதுதான் சரி!" என்று ஒத்துக்கொண்ட நாகவர்மன் "மேற்கொண்டு உங்களுக்கு இந்த நாட்டில் ஏதாவது வேலை இருக்கிறதா? உங்களுக்கு உதவ நான் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்ருன்.

வீரசிம்மன், பலதேவன் மங்களசுந்தரி'யைத் தூக்கி வந்திருப்பதையும் அவளை மீட்கவே

தாங்கள் வந்திருப்பதையும், முழுக்கதையையும் சொன்ஞன்.

‘‘பாம்புப் பாறைக்கு வந்த காரியம் சுலபமாக முடிந்துவிட்டது. இனி மங்களசுந்தரியைக் காப் பாற்ற வேண்டிய வேலைதான் பாக்கி ’’ என்று கூறிஞன் வீரசிம்மன்.

கிளி உருவிலிருந்த ஜம்பு பேச ஆரம்பித்தது.

‘‘இளவரசே! மங்களசுந்தரியைக் காப்பாற்ற வழி ஒன்றிருக்கிறது. நாகவர்மன் உதவி இருந் தால் சீக்கிரமே முடித்துவிடலாம். நாகவர்மன் தனது பாம்புக் கூட்டத்தால் இந்த நாட்டையே பயமுறுத்தவேண்டும். பலதேவனுக்குப் பயம் ஏற் படும். பாம்புகளை எப்படியும் துரத்தியடிக்கப் பார்ப்பான். அப்போது மந்திரவாதி உருவில் உள்ள நீங்களும் மதிவாணனும் பலதேவனிடம் சென்று பாம்புத் தொல்லையை எப்படியும் ஒழித்து விடு கிறேன் என்று சொல்லுங்கள். உங்கள் கட்டளைப் படி நாகவர்மனும் அவன் கூட்டமும் பழையபடி பாம்புப் பாறைக்குத் திரும்பிவிடுவார்கள். உங்கள் திறமையை பலதேவன் மெச்சுவான். பிறகு என் உருமாறும் சக்தியைக் கொண்டு நீங்கள் அவன் நம்பிக்கையை மேலும் பெறலாம். உங்கள் வரு கையை நான் எப்படியும் மங்களசுந்தரிக்குத் தெரி வித்து விடுகிறேன். சமயம் வரும்போது மங்கள சுந்தரியைக் கடத்திக்கொண்டு எல்லோரும் தப்பி விடுவோம்.’’

ஜம்பு யோசனையை எல்லோரும் ஆதரித்தார்கள். பிறகு ஜம்புவின் யோசனைப்படியே பச்சைத் தீவு இளவரசி பிரபாவதி ஆண்வேடம் தரித்துக் கொண்டாள். வீரசிம்மனும், மதிவாணனும் ஆண் வேடம் பூண்ட பிரபாவதியும், கிளியுருக்கொண்ட ஜம்புவும் பவழத்தீவு தலைநகரான பவளபுரிக்குக் கிளம்பினார்கள். அவர்கள் அங்குபோய்ச் சேர்ந்த பிறகு தன் பாம்புப்படையுடன் பவளபுரிக்கு வந்து சேருவதாக வாக்களித்தான் நாகவர்மன்.

13. மந்திரவாதிகள் மகிமை!

பவளபுரியில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அனைவரும் தங்கினார்கள். கிளி உருவில் இருந்த ஜம்பு தாங்கள் பவளபுரியை அடைந்த செய்தியை நாகவர்மனுக்குத் தெரிவித்து வந்தது.

அடுத்தநாள் காலை பவளபுரியெல்லாம் ஒரே பரபரப்பு. மக்களெல்லாம் பயத்துடன் தெருக்களெங்கும் ஓடினர். யாரைப் பார்த்தாலும் ''பாம்பு'' ''பாம்பு'' எனக் கூவினர். மக்கள் பயத்தால் நடுநடுங்கினர். அனைவரும் அரண்மனையை நோக்கி ஓடினர். அங்கு......

அரண்மனையிலும் ஏராளமான பாம்புகள் இங்குமங்கும் ஊர்ந்து சென்றன. தூண்களில் சுற்றிக்கொண்டு அருகில் வருபவரைப் பார்த்துச் சீறின. செடி கொடிகளில் புடலங்காய்களைப் போலத் தொங்கின.

பலதேவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. பாம்புகளை அழித்து வரும்படி உத்திரவிட்டான்.

ஆனால் அவைகளை அழிக்கப் போனபோதெல்லாம் எங்கோ மறைந்து கொண்டன. அவை மக்கள் யாரையும் கடிக்கவில்லை. பயமுறுத்த வேண்டுமென்பதுதான் நாகவர்மனின் கட்டளை. கிட்டத்தட்ட ஒரு வார காலம்வரை பாம்புகள் தோன்றுவதும், மறைவதுமாகவே இருந்தன.

பலதேவனுக்கு இது ஒரு பெரிய தலைவலியாக இருந்தது. ஊரில் உள்ள பாம்புப் பிடாரன்களெல்லாம் சிரமப்பட்டும் பாம்புகளைப் பிடிக்க முடியவில்லை. பலதேவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இப்படி யிருக்கையில் ஒருநாள் சூலங்களோடும், நீண்ட சடைமுடிகளோடும் இரு மந்திரவாதிகள் அரச சபைக்கு வந்தார்கள். மந்திரவாதிகள் வேறு யாருமில்லை. நமது வீரசிம்மனும், மதிவாணனும் தான். பலதேவனுக்கு மந்திரவாதிகளிடம் எப்போதுமே பயமுண்டு. ஆகவே அவர்களை வரவேற்று உபசரித்தான்.

"ஜெய் காளி! ஜெய் சாமுண்டீ! அரசே! உன் நாட்டில் பாம்புத் தொல்லை மிக அதிகமாக இருக்கின்றதல்லவா? அவைகளை ஒழித்து உனக்கு நிம்மதி அளிக்கவே காளி என்னை அனுப்பியிருக்கிறாள்!" என்றான் மந்திரவாதி வேடத்திலிருந்த வீரசிம்மன்.

"சுவாமி! என் மனதில் இருந்த கவலையை எப்படியோ தெரிந்துகொண்டீர்கள்! தாங்கள்

தான் தயவுசெய்து இந்தப் பாம்புத் தொல்லையி லிருந்து என் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்' என்றுன் பலதேவன்.

''பயப்படாதே பலதேவா! அதற்காகவே நாங்கள் இருவரும் இங்கு வந்திருக்கிறோம். நாளைக் காலை அத்தனை பாம்புகளும் மறைந்து விடும். எங்களுக்கு அரண்மனையில் தங்குவதற் குத் தனியான இடம் தேவை'' என்றுன் வீர சிம்மன்.



''தங்கள் சித்தப்படியே சுவாமி!'' என்று அவர்களை வணங்கினுன் பலதேவன்.

அவர்களிருவரும் அரண்மனையில் தங்கு வதற்கான ஏற்பாடுகள் உடனே செய்யப்பட்டன.

அழகான பெரிய அறையொன்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

"சரி பலதேவா! நீ போகலாம். இனி ஆக வேண்டியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்! காலையில் ஒரு பாம்பு கூட இங்கு இருக்காது" என்று சொல்லி பலதேவனை அனுப்பிவைத்தான் வீரசிம்மன்.

அடுத்தநாள் காலை பவளபுரியில் தெருவெங்கும், வீடெங்கும் காட்சியளித்த பாம்புகள் எல்லாம் மாயமாக மறைந்து விட்டன. மந்திரவாதிகளின் பெருமையைப் பற்றி ஊரெங்கும் ஆச்சரியமாகப் பேசிக்கொண்டார்கள். பலதேவனுக்கு மிக்க மகிழ்ச்சி. வீரசிம்மன் இருக்குமிடத்திற்கு ஓடி வந்தான்.

"சுவாமி! உங்கள் சொல்படியே எல்லாப் பாம்புகளும் ஓடிவிட்டன! உங்கள் மகிமையே மகிமை! உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை" என்றான் பலதேவன்.

"பலதேவா! இதென்ன பிரமாதம்! எங்கள் திறமையில் நூறில் ஒரு பங்கைக் கூட நீ இன்னும் பார்க்கவில்லை. நாங்கள் இஷ்டப்பட்டால் கிளியைப் புலியாக்குவோம். புலியைப் பூனையாக்குவோம்! பூனையைப் பெண்ணாக்குவோம்! தெரியுமா! எங்களால் இயலாதது ஒன்றும் இல்லை!" என்றான் வீரசிம்மன்.

"அப்படியா சுவாமி? ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் பலதேவன்.

''ஆச்சரியப் படாதே! நேரிலேயே பார்! இது என்ன?'' என்று கிளி உருவில் இருந்த ஜம்புவைக் காட்டினன் வீரசிம்மன்.

''கிளி'' என்ருன் பலதேவன்.

''இதைக் கீரியாக மாற்றுகிறேன் பார்'' என்று அக் கிளியின் மேல் சிறிது தண்ணீரைத் தெளித்து மந்திரம் ஜபித்தான் வீரசிம்மன். கிளி கீரியாக மாறிற்று. பிறகு கீரி குயிலாயிற்று. ஏன் மாருது. ஜம்புவல்லவா மாறுகிறது. இதையெல்லாம் திறந்தவாய் மூடாது பார்த்துக் கொண்டிருந்தான் பலதேவன். அவனுக்கு மந்திரவாதிகளின் மீது பக்தியே ஏற்பட்டு விட்டது. ''சுவாமி! நீங்கள் உண்மையிலேயே பெரிய மகான்! உங்கள் மகிமை அளவில்லாதது. உண்மையில் கண் கண்ட தெய்வம் நீங்கள் தான்!'' எனப் பலவாறு புகழ்ந்தான்.

வீரசிம்மன் இதைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''பலதேவா! இப்போது வெறும் உருவத்தைத் தானே மாற்றினேன்! உள்ளங்களையே மாற்றும் சக்தி என் மந்திரங்களுக்குண்டு,'' என்ருன்.

பலதேவன் ஆச்சரியமடைந்தான். பிறகு வீரசிம்மனைப் பார்த்து ''சுவாமி! உங்கள் சக்தி மேல் எனக்கு நல்ல நம்பிக்கையிருக்கிறது.

தாங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!'' என்ருன்.

''என்ன பலதேவா?'' என்று கேட்டான் வீரசிம்மன்.

''சுவாமி! சிங்களபுரி தேச இளவரசி மங்கள சுந்தரியைத் திருமணம் செய்துகொள்ள எனக்கு ஆசை. ஆனல் அவளோ மருங்காபுரி இளவரசன் வீரசிம்மனைத் தான் மணம் செய்து கொள்ள விரும்பினுள். ஆகவே அவளை இங்கு தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன். ஆனல் அவள் எப்போதும் வீரசிம்மன் ஞாபகமாகவே இருக்கிருள். என்னைக் கண்டாலே வெறுக்கிருள். பேசக்கூட மறுக்கிருள். தாங்கள்தான் தயைசெய்து தங்கள் மந்திர சக்தியால் வீரசிம்மனை மறக்கவைத்து என்மீது ஆசை கொள்ளச் செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

''பூ! இவ்வளவுதானே! இது மிகச்சுலபம். ஆமாம்! அவனை எங்கே வைத்திருக்கிருய்?'' என்று கேட்டான் வீரசிம்மன்.

''அருவிக்கரை மாளிகையிலே வைத்திருக்கிறேன். தாங்கள் ஒரு நாள் அங்கு சென்று அவள் மனதை மாற்றி எனக்கு உதவி செய்ய வேண்டும்!'' என்று சொல்லி வணங்கினுன் பலதேவன்.

“பயப்படாதே! பலதேவா! எல்லாம் சுப மாகவே முடியும்! நாளைக்கே அருவிக்கரை மாளிகைக்கு என்னை அனுப்பிவை! பிறகு பார்! எவ்வளவு ஆச்சரியமான காரியங்கள் நடக்கின்றன என்று. ஆனால் நீ அந்த மாளிகைக்கு வரக்கூடாது. ஏனென்றால் உன் முன்னால் அந்த மந்திரங்களுக்கு மதிப்பிருக்காது” என்றான் வீரசிம்மன்.

“தங்கள் சித்தம்! உங்கள் பிரயாணத்திற்கு இப்போதே ஏற்பாடு செய்கிறேன்” என்று விடை பெற்றான் பலதேவன்.

பலதேவன் சென்றதும் மயிலாக நின்ற ஜம்புவைப் பார்த்தான் வீரசிம்மன். மயில் கிளியாயிற்று “இளவரசே? நீங்கள் நினைப்பது எனக்குத் தெரிகிறது! இப்போதே அருவிக்கரை மாளிகைக்குச் சென்று உங்கள் வரவை இளவரசிக்குத் தெரிவிக்கிறேன்” என்று சொல்லியபடியே தன் சிறகையடித்து வெளியே பறந்தது ஜம்பு.

14. அருவிக்கரை மாளிகை

பவளபுரிக்கு வெளியே யிருந்த அருவிக் கரையில் அமைந்திருந்தது பலதேவனின் அருவிக்கரை மாளிகை. மங்களசுந்தரியை அங்கு தான் பலத்த காவலுடன் வைத்திருந்தான் பலதேவன். மங்களசுந்தரி தன் விதியை நினைத்து அழாத நாளில்லை. அன்றும் அழுதுகொண்டுதான் இருந்தாள். "பட பட வென்று சிறகடித்து அறைக்குள் நுழைந்த கிளியைக் கண்டதும் தன் அழுகையை நிறுத்தினாள்.

"மங்களசுந்தரி தேவி!" என்று கிளி அழைத்தவுடன் அவள் அடைந்த ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை.

"திகைப்படையாதீர்கள் தேவி! நான் ஜம்பு என்ற தேவதை. நான் தற்போது மருங்காபுரி இளவரசன் வீரசிம்மனின் சேவகன். அவர் அனுப்பியே தற்போது வந்துள்ளேன்" என்று கூறி தன் சுய உருவத்தைக் காட்டியது.

பிரகாசமான அந்த உருவத்தைக் கண்டவுடன் மங்களசுந்தரி வியப்பும் மகிழ்ச்சியும்

அடைந்தாள் வீரசிம்மன் தன்னைக் காப்பாற்ற வரப்போகிறான் என அறிந்ததும் அளவில்லாத ஆனந்தம் அடைந்தாள். ஜம்பு எல்லா விவரங்களையும் கூறியது. வீரசிம்மன் அடுத்த நாள் மந்திரவாதி உருவில் வரப்போகிறான் என்பதையும் அறிவித்தது.

மங்களசுந்தரியின் கண்களில் இப்போது ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ஜம்புவை அவள் வாழ்த்தினாள் அடுத்த நாள் வீரசிம்மன் வரும்போது தப்பிச் செல்லத் தயாராக இருக்குமாறு கூறி, மீண்டும் கிளியாக மாறி, பவளபுரி அரண்மனையை யடைந்தது ஜம்பு.

மறு நாள் மாலை மந்திரவாதிகள் இருவரும் அருவிக்கரை மாளிகைக்குக் கிளம்பினர். "பலதேவா! எதற்கும் கலங்காதே! எல்லாம் எப்படி நடக்க வேண்டுமோ அப்படியே நடக்கும். நாளைக் காலைவரை பொறுத்திரு! பிறகு மங்களசுந்தரி ராணியாகிவிடுவாள்!" என்று கூறி வீரசிம்மன் மதிவாணனுடன் கிளம்பினான். பலதேவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது இருவரும் குதிரைகளில் ஏறிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் அருவிக்கரை மாளிகையை அடைந்தபோது சூரியன் மறைந்து நிலவொளி வீசிக் கொண்டிருந்தது. குதிரைகளை மரத்தில் கட்டி விட்டு உள்ளே நுழைந்தார்கள். அரசனிடமிருந்து உத்திரவு வந்து இருந்ததால் காவ

லாளிகள் மந்திரவாதிகளைக் கண்டதும் வணங்கி உள்ளே அழைத்துச் சென்ருர்கள்.

மங்களசுந்தரி இருக்கும் அறையை அவர்கள் அடைந்தார்கள். வீரசிம்மன் அந்த அறைக் கதவைத் தாளிட்டான். மதிவாணன் காவலாக அங்கேயே நின்று கொண்டான். வீரசிம்மனைக் கண்டவுடன் மகிழ்ச்சிப் பெருக்கால், மங்கள சுந்தரி அழுதே விட்டாள். வீரசிம்மன் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"அழாதே! நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது! இன்றே இந்தத் தீவை விட்டுப் போய் விடலாம்" என்று சொல்லி அவளைத் தேற்றினுன். பிறகு மூவரும் வெளியே வந்தார்கள்.

வெளியே வந்தவுடன் அந்த மாளிகைக்காவல் தலைவனை வீரசிம்மன் கூப்பிட்டான். "இதோ பார்! இளவரசியாருக்குக் கடற்கரையில் வைத்துத் தான் மந்திரங்கள் போடவேண்டும். ஆகவே எங்களுக்கு உடனே இன்னொரு குதிரையைக் கொண்டு வா!" என்று கூறினுன்.

காவல் தலைவன் இளவசரனை வணங்கி "தங்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்பது எங்கள் அரசரது கட்டளை. இப்போதே ஒரு உயர்ந்த குதிரையைக் கொண்டு வருகிறேன்" என்று கூறிச் சென்ருன்.

சிறிது நேரத்தில் அருவிக்கரை மாளிகையிலிருந்து மூன்று உருவங்கள் குதிரைகளில் ஏறி

கனவேகமாகப் புறப்பட்டன. அவைகள் கடற் கரையை நோக்கிப் போவது நிலவொளியில் நன்ருகத் தெரிந்தது.

அதே நேரத்தில், கிளி உருவில் இருந்த ஜம்புவுடன் ஆண் உருவத்தில் இருந்த பிரபாவதி பவளபுரியிலிருந்து புறப்பட்டாள். அவளும் குதிரை மேல் ஏறிக் கொண்டு கடற்கரையை நோக்கித்தான் சென்ருள்.

இவர்கள் அனைவரையும் எதிர்பார்த்துக் கொண்டு கடற்கரையில், நாகவர்மன் காத்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் கடற்கரையில் சந்தித்தனர். வீர சிம்மனும் மதிவாணனும் கடற்கரை அதிகாரியைச் சந்தித்துத் தங்கள் கப்பலை மீண்டும் பெற்றுக் கொண்டார்கள். மூவரே வந்த கப்பலில் இப் போது நாகவர்மன், மங்களசுந்தரி, பிரபாவதி ஆக மூன்று புதியவர்களும் சேர்ந்து கொண்டனர். நடு நிசி. நல்ல நிலவொளி வீசிக் கொண்டிருந்தது. கப்பல் தன் பிரயாணத்தைத் தொடங்கியது.

மறுநாள் காலை சூரியன் உதித்த போது அவர் கள் பவளத்தீவிலிருந்து பல காத தூரம் வந்து விட்டார்கள்.

அதே சமயத்தில் பவளத்தீவின் கடற்கரை யில் மந்திரவாதிகளையும் மங்களசுந்தரியையும் ஆவலோடு தேடிக் கொண்டிருந்தான் பல தேவன். ஆனுல் அவன் பெரிய ஏமாற்றத்தைத்

தான் அடைந்தான். பிறகு ஏமாற்றம் ஆத்திரமாக் மாறியது. மந்திரவாதிகள் மங்களசுந்தரியுடன் தப்பிச் சென்றதை யறிந்தவுடன் அவன் பெருத்த கோபமடைந்தான். ஆனால் மந்திரவாதிகளைத் தொடர்ந்து செல்ல அவனுக்குத் தைரியம் இல்லை. சென்றாலும் பயனிருக்காது என்று அவனுக்குத் தெரியும். ஆகவே வருத்தத்துடனும், ஏமாற்றத் துடனும் அரண்மனைக்குத் திரும்பினான். அவன் ஒரு முறை எல்லோரையும் ஏமாற்றி மங்கள சுந்தரியைத் தூக்கி வந்தான் அல்லவா? இப்போது அவனே ஏமாந்தான்!

15. முட்டை உடைந்தது

ஏறக் குறைய ஒருவாரம் வீரசிம்மனும் மற்ற வர்களும் கடலில் பிரயாணம் செய்த பிறகு அவர் கள் கண்களுக்குப் பாலைத்தீவு தென்பட்டது. கப்பலில் செல்லும் போதே மதிவாணனுக்கும் பிரபாவதிக்கும் அன்பு பலப்பட்டது. இரு வரும் திருமணம் செய்து கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

பாலைத்தீவை அடைய நாகவர்மனும் ஜம்புவும் தான் மிகவும் துடித்தார்கள். ஏனென்றால் நீலி, அவர்களுக்குத்தானே பெரிய எதிரியாக இருந் தாள். அவர்கள் நீலியைக் கொன்று விட வேண்டு மென்று ஆத்திரப்பட்டார்கள். கப்பல் கரையை நெருங்கியது. ஜம்பு கப்பலை ஒரு மறைவான இடத்திற்குச் செலுத்தியது.

அவர்கள் வரவை தேவதைகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. அவர்களைக் கண்டவுடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. பிரபாவதி, மங்களசுந்தரி, நாகவர்மன் ஆகியோருக்கு அந்தச் சிறிய தேவதைகளைக்

காணும்போது புதுமையாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

ஜம்பு, பிரபாவதியையும் மங்களசுந்தரியையும் அந்தத் தேவதைகளிடம் ஒப்படைத்தது. அவர்களை ஒரு பாழடைந்த மண்டபத்திற்குள் உட்கார வைத்தது. பிறகு வீரசிம்மன், மதிவாணன், நாகவர்மன், ஜம்பு ஆகிய நால்வரும் நீலியின் குகைக்குக் கிளம்பினர்.

நீலியின் குகையைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும் அங்கு சிதறிக் கிடந்தன. நால்வரும் குகைக்குள் நுழைந்தனர். குகைக்கு நடுவில் நீலி தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் பல பெட்டிகள் இருந்தன. அப்பெட்டிகளில் அரசகுமாரர்களது உயிரில்லாத உடல்கள் கெடாமல் வைக்கப்பட்டிருந்தன.

மற்ற மூவரையும் நிற்க வைத்துவிட்டு வீரசிம்மன் மட்டும் நீலி அருகில் வந்தான். அவள் தலை மயிர்கள் எல்லாம் கலைந்து போயிருந்தன. வாயைத் திறந்து கொண்டு, பற்கள் எல்லாம் வெளியே தெரியும்படி தூங்கிக்கொண்டிருந்தாள். அதைப் பார்க்கவே பயங்ரமாக இருந்தது. வீரசிம்மன் அவளை எழுப்பினன்.

திடுக்கிட்டு எழுந்தாள் நீலி. கண்களைத் துடைத்துக் கொண்டு வீரசிம்மனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''ஏய்! யார் நீ! எப்படி இங்கே வந்தாய்?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''என்னைத் தெரியவில்லையா உனக்கு? என்னை இங்கு கொண்டுவர நீ எவ்வளவு கஷ்டப் பட்டாய்! உனக்குச் சிரமம் கொடுக்காமல் நானே வந்திருக்கிறேன்!'' என்ருன் வீரசிம்மன்.

''ஹோ...ஹோ! '' என்று பெரிதாகச் சிரித்தாள் நீலி. ''தெரிகிறது, தெரிகிறது!...நீ வீரசிம்மன் தானே ? என்னைத் தேடியே வந்து விட்டாய். என் பாடு கொண்டாட்டம் தான்!'' என்று கை கொட்டிச் சிரித்தாள்.

''ஆனுல் நான் எதற்கு வந்திருக்கிறேன் தெரியுமா? உன் அட்டகாசத்திற் கெல்லாம் முடிவு கட்டத்தான். இப்போது உன் உயிர் என் கையில் இருக்கிறது. நீ தூங்கும் போதே உன்னைக் கொன்றிருப்பேன். ஆனுல், நீ நிறைய பாவங் களைச் செய்திருக்கிருய். அதற்காக, நீ கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும் என்று தான் எழுப்பினேன். இப்போதே வேண்டிக்கொள்!'' என்ருன் வீரசிம்மன்.

''வீரசிம்மா! என்னையாவது, நீ கொல்வதா வது?... என்னைக் கொல்வதற்கு யாரும் பிறக்க வில்லை. பிறக்கப் போவதும் இல்லை.... உன் முடிவு காலம் தான் நெருங்கிவிட்டது. உன்னையும் கொன்று விட்டால் இருபத்தியேழும் பூர்த்தியாகி விடும். அப்புறம் இந்த உலகில் என்னை யாருமே

ஒன்றும் செய்ய முடியாது!... ஆகையால் நீதான் கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும்!" என்றுள் நீலி.

"சீ பேயே! நீ செய்த அக்கிரமங்களுக்குக் கணக்கே யில்லை விளைவித்த துன்பங்களுக்கு எல்லையே இல்லை. இதோ பார், உன்னை ஒழித்துக் கட்டவே உன் உயிரைக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று கூறி முட்டையை வெளியே எடுத்தான் வீரசிம்மன்.

ஒரு விநாடி நீலி திடுக்கிட்டாள். பிறகு சிரித்துக் கொண்டே "அது என் உயிர் முட்டையில்லை! அதை யாராலும் கொண்டு வர முடியாது. அது யாரிடம் இருக்கிறது தெரியுமா?" என ஆரம்பித்தாள்.

சட்டென்று முன்னுல் வந்தான் நாகவர்மன். முட்டையைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். அவனைக் கண்டதும் திகைப்படைந்தாள் நீலி... "நாகவர்மனு?... நீ எப்படி இங்கு வந்தாய்?" என்றுள்.

"உனக்கு முடிவு கட்டத்தான் வந்திருக்கிறேன். பாவி! உன் மந்திரசக்தியால் எவ்வளவு பேரைத் துன்புறுத்தி இருக்கிருய்? என்னையே அடிமைப் படுத்தி இருந்தாயே! இந்த முட்டையை என் கையாலேயே உடைத்து உன்னைக் கொல்கிறேன் பார்!" என்றுன் நாகவர்மன்.

"என்னையா கொல்லப் போகிருய்? பாருங்கள், உங்கள் இருவரையுமே என்ன செய்கிறேன்

பார்!'' என்று கூறியபடியே, தன் மந்திரக்கோலை எடுக்க ஓடினுள் நீலி. அதே சமயம் அங்கு ஒரு காகம் பறந்து வந்தது. மந்திரக் கோலைத் தூக்கிச் சென்றது. அந்தக் காகம் வேறு யாருமில்லை! ஜம்புதான்!

ஜம்பு தன் சுய உருவத்திற்கு மாறியது. அதைப் பார்த்தவுடன் நீலி திடுக்கிட்டாள்.


''ஜம்புவா? நீ எப்படி சிலையிலிருந்து வந் தாய்? எல்லாம் குழப்பமாக இருக்கிறதே!'' என்ருள்.

''குழப்பம் ஒன்றுமே இல்லை. நீ செய்த எல்லா கெட்ட காரியங்களுக்கும் இப்போது அவைகளின் பலனை அனுபவிக்கிருய்!'' என் றது ஜம்பு.

இனி தப்ப முடியாது என உணர்ந்தாள் நீலி. உடனே கெஞ்ச ஆரம்பித்தாள். ''வீரசிம்மா! என்னை விட்டு விடு! உங்கள் கண்களில் படாமல் ஓடி விடுகிறேன்...நாகவர்மா! உன்னைக் கும்பிடு கிறேன்! என்னை விட்டு விடு! என்னைக் கொல் லாதே!'' என்று மண்டியிட்டுக் கெஞ்சினுள்.

நாகவர்மன் சொன்ஞன் :—''உன் [illegible] புத்தி மாருது. உனக்கு நன்மை செய்தாலும் பாவம். உன்னைக் கொல்வது உலகத்தாருக்குச் செய்யும் நன்மை. அது மட்டும் அல்ல. இந்த முட்டையை உடைப்பதால் இருபத்தியாறு அரச குமாரர்கள் பிழைப்பார்கள். நீ ஒருத்தி சாவதால் இத்தனை பேர் பிழைப்பார்களே!'' என்று கூறிய வண்ணம்

முட்டையை உடைக்கக் கையை ஓங்கினுன் நாகவர்மன்.



நீலி கெஞ்சினுள். அழுது பார்த்தாள். கதறினுள். கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டாள். ஆனுல் அவரவர்கள் வினையை அவரவர்கள் அனுபவித்துத்தானே தீரவேண்டும்?

யாருமே அவளுக்கு இரக்கம் காட்டத் தயாராக இல்லை. நாகவர்மன், அவள் கதறலைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. முட்டையை ஓங்கித் தரையில் அடித்தான்.

நீலியும் ‘‘தடா’’லென்று பூமியில் விழுந் தாள். துடித்தாள். அடுத்த விஞடியே இறந்து போனுள்.

உடைந்த முட்டையிலிருந்து ரசம் கீழே சிந்தியது. ஜம்பு அதைக் கையிலெடுத்து அங்கிருந்த அரசகுமாரர்களின் உடல்கள் மீது தெளித்தான் ஐந்தே விஞடிகளில் அவர்கள் எழுந்தார்கள். எல்லோரும் வீரசிம்மனே வணங் கினுர்கள். தங்களுக்கு உயிர் அளித்தமைக்காக நன்றி கூறினுர்கள்.

அங்கிருந்து எல்லோரும் கிளம்பினுர்கள். இளவரசிகள் தங்கியிருந்த மண்டபத்திற்கு வந்தார்கள். அனைவரும், அந்த நாளை அங்கேயே ஆனந்தமாகக் கழித்தார்கள்.

16. ‘‘போய் வாருங்கள்’’

மறுநாள். நாகவர்மன் அனைவரிடத்தும் விடை பெற்றுக் கொண்டான். பாம்பு உருவம் எடுத்துக்கொண்டு, கடலில் இறங்கினான். பாம்புப் பாறையை நோக்கிப் பயணமானான்.

அன்று மாலையே அனைவரும் மருங்காபுரி செல்வதென்று முடிவு ஆயிற்று. வீரசிம்மனுக்கு ஜம்புவைப் பிரியவே மனமில்லை. தன்னுடன் தன் நாட்டிற்கு வருமாறு அழைத்தான்.

ஆனால் ஜம்புவோ ‘‘இளவரசே! நாங்கள் தேவதைகள். எப்போதும் உல்லாசமாக ஆடிப் பாடிக் களித்திருப்பதே எங்கள் வேலை! நீலியால் பாழாக்கப்பட்ட இந்தத் தீவைப் பழையபடி புதுப்பிக்க வேண்டும். நீங்கள் அனைவரும் நலமாகச் சென்று வாருங்கள்! நீங்கள் செய்த உதவியை நான் மறக்க மாட்டேன். எப்போதும் உங்களையும் உங்கள் நண்பரையும் நினைத்துக் கொண்டிருப்பேன். நீங்களும் என்னை மறக்காதீர்கள். சென்று வாருங்கள். இந்த ஜம்பு என்றைக்கும் உங்கள் சேவகன் தான் ’’என்றது.

வீரசிம்மன் ஜம்புவை அணைத்துக் கொண்டான். "ஜம்பு! அப்படியெல்லாம் சொல்லாதே! நீ என் சேவகனும் இல்லை! நான் உன் எஜமானனும் இல்லை! நீ என் நண்பன். மதிவாணனைப் போல் நீயும் என் உயிர்த் தோழனுகி விட்டாய். உனது அறிவுத் திறமையாலும் ஆலோசனையாலுமே எல்லாம் நல்லபடியாக



முடிந்தது. உன்னை என்னுல் மறக்கவே முடியாது!" என்று சொல்லும்போதே அவன் கண்களில் நீர் வழிந்தது. எல்லோருக்குமே ஜம்புவைப் பிரிவது கஷ்டமாகத் தான் இருந்தது. ஆனுல் என்ன செய்வது? தேவதைகள் வாழ்க்கையும் மனித வாழ்க்கையும் ஒத்து வருமா?

ஜம்பு வீரசிம்மன் கண்களில் வழிந்த நீரைத் துடைத்தது. "நீங்கள் பெரிய வீரர்! அழக்

கூடாது. நீங்கள் பல்லாண்டுகள் சீரும் சிறப்பு மாக வாழவேண்டும். அதற்கு தேவதைகளாகிய எங்கள் ஆசிகள் என்றும் உண்டு. சௌக்கிய மாகப் போய் வாருங்கள் என்று கூறியது.

பிறகு எல்லா தேவதைகளும் ஜம்புவுடன் சேர்ந்து கொண்டு, அனைவரையும் சுற்றி வந்து பாடி நடனம் ஆடின.

"வணக்கம் வணக்கம் வீரர்காள் !
வணக்கம் வணக்கம் அரசிகளே !
பல்லாண்டு காலம் வாழ்வீரே !
பல்வகைப் பேறும் பெறுவீரே"

என்று பாடிக் கொண்டே அவர்களை வழி யனுப்பின. அந்தத் தேவதைகளின் அன்பைக் கண்டு அனைவருமே கண் கலங்கினர்.

கப்பல் மருங்காபுர்'க்குக் கிளம்பியது. ஜம்பு வும் தேவதைகளும் தங்கள் கைகளை வீசி விடை கொடுத்தனர். நீலக்கடலில் கப்பல் கம்பீரமாகத் தன் பயணத்தைத் தொடங்கியது.

வீரசிம்மன் கப்பல் மேல்தளத்தில் அமர்ந்து கொண்டிருந்தான். கண்ணுக்கு மறையும் வரை கரையிலிருந்த ஜம்புவையே பார்த்துக் கொண் டிருந்தான். அவனால் ஜம்புவை மறக்கவே முடியவில்லை.

17. மங்களம்

ஊரெங்கும் ஒரே கொண்டாட்டம். அன்றைய தினம் போல் மருங்காபுரி மக்கள் என்றுமே மகிழ்ச்சி அடைந்ததில்லை. "வீரசிம்மன் வாழ்க! மதிவாணன் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் நகரமெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன.

கப்பலில் வந்த இருபத்தாறு தேச அரச குமாரர்களும் வரவேற்கப் பட்டார்கள். அவர் களது தேசங்களுக்கு தூதுவர்கள் அனுப்பப் பட்டனர். மங்களபுரிக்கும் பச்சைத் தீவிற்கும் அமைச்சர் அமரசிம்மரே சென்றூர். தூதுவர் களிடமிருந்து விஷயங்களறிந்த அரசகுமாரர் களது பெற்றோர்கள் அடைந்த மகிழ்ச்சியை எப்படிக் கூறுவது? பச்சைத் தீவு அரசரும், மங்களபுரி மன்னரும் தங்களது குமாரிகள் திரும்பி வந்து விட்டனர் என்று அறிந்த போது அடைந்த ஆனந்தத்தை வருணிப்பது முடியாத காரியம்.

எல்லா அரசர்களும் மருங்காபுரி வந்து சேர்ந்தனர். மருங்காபுரி கண் கொள்ளாக் காட்சியளித்தது தாங்கள் பெற்ற செல்வங்களை மீண்டும் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர். எல்லா அரசர்களும் வீரசிம்மனுக்கும் மதி வாணனுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்

கொண்டனர். அப்போது அவர்கள் இருவரும் ஜம்புவைத் தான் நினைத்துக் கொண்டர்.

ஒரு நல்ல நாளில் எல்லோருடைய முன்னிலையிலும் வீரசிம்மனுக்கும் மங்களசுந்தரிக்கும் திருமணம் நடந்தேறியது. அதேசமயம் மதிவாணன் பிரபாவதி திருமணமும் நிறைவேறியது. எல்லோரும் மணமக்களை வாழ்த்தினர். மருங்காபுரியே மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது.

பவளத்தீவு அரசர் ராஜவர்மனுக்கு பிரபாவதி ஒரே மகள். ஆகவே மதிவாணனே அத்தீவை ஆளும்படி அவர் கேட்டுக் கொண்டார். ஆனல் மதிவாணனே பச்சைத்தீவை மருங்காபுரியுடன் இணைத்து, அற்கும் வீரசிம்மனே அரசனுகும்படிக் கேட்டுக் கொண்டான். அவன் மந்திரியாகவே இருக்க விரும்பினன். ஆகவே, மருங்காபுரி, மங்களபுரி, பச்சைத்தீவு மூன்றும் சேர்ந்து பெரிய நாடாக மாறியது. மார்த்தாண்டன் இந்நாட்டிற்கு வீரசிம்மனை அரசனுக்கினன்

வீரசிம்மன் நெடுங்காலம் மருங்காபுரியின் அரசனுக செங்கோல் செலுத்தி வந்தான். அறிவிற் சிறந்த மதிவாணன் மந்திரியாக இருந்து சிறந்த ஆலோசனைகளைக் கூறிப் பெயரும் புகழும் பெற்றுன்.

வீரசிம்மன் தனித்து இருக்கும் போதெல்லாம் கடற்கரைக்கு உலாவப்போவது வழக்கம். அப்போதெல்லாம் கடலில் இருந்து ஒரு கானம் காற்றில் மிதந்து வருவதுபோல் தோன்றும்.

ஆம்! அது அவன் ஆருயிர்த் தோழன் ஜம்புவின் இனிய கானம் தான்!

VEERASIMMANIN VETRI YATRAI

by K. J. RAMANARAYANAN

இருபத்தியேழு அரசகுமாரர்களைக் கொன்று மாபெரும் சக்தி பெற எண்ணிய சூனியக்காரி நீலி மருங்காபுரி இளவரசன் வீரசிம்மனைக் கடத்திச் செல்ல முயல்கிறாள். அவள் முயற்சி பலித்ததா? நீலியால் சிலையாக்கப்பட்ட தேவதை ஜம்புவை வீரசிம்மன் எப்படி விடுவித்தான்? உருமாறும் சக்தி கொண்ட ஜம்புவின் உதவியால் நீலியின் உயிரடங்கிய முட்டையை நாகவர்மனிடமிருந்து எப்படிக் கைப்பற்றினான்? இறுதியில் நீலி எப்படிக் கொல்லப்பட்டாள்? இவளால் கொல்லப்பட்ட இருபத்தியாறு அரசகுமாரர்கள் எவ்வாறு உயிர் பெற்றெழுந்தார்கள்? என்பவைகளுக்கெல்லாம் சுவையான பதில் கூறும் அருமையான கற்பனைக் கதை இந்நூல்.

இந்நூலாசிரியர்........

கே. ஜே. ராமநாராயணன் சிறுவர்களுக்கு எழுதுவதில் தணியா ஆர்வமும் அனுபவமும் உள்ளவர். பள்ளித் துணை ஆய்வாளராகப் பணி யாற்றி வரும் இவர் 'கௌரி புத்திரன்' என்ற புனைப் பெயரில் சிறுவர்களுக்கென அடிக்கடி தமிழ் ஏடுகளில் எழுதி வருபவராவார்.

பாரதி பண்ணை,
சென்னை-17.

